1569 1569

ம் மலர் 7.

ஸ்ரீராமஜெயம்

சகல நாடகக் கம்பெனியார்களும் பாடி நடித்துவரும்

# சக்குபாய் சரித்திரம்

சென்னை: ஸ்ரீ பால வினோத நாடக சபாவின் உபாத்தியாயர்



நாடகாசிரியர்: ச. க. சங்கரலிங்கக் கவிராயர் அவர்கள் இயற்றியது.

OFFICE OF THE REGISTRAR
20 SEP 1937
MADRAS

சென்னை:

நாயகர் ஸன்ஸ் பதிப்பு.

1933. [விலை 0-6-0.

O-, 2M8L7, M
N33.
172429

உ

ஸ்ரீ பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:

P. S. வேலு நாயர், K. S. அனந்தநாராயண அய்யர்,
S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள்,
தி. நாராயணசாமி பிள்ளை, K. சீனிவாச
பிள்ளை கம்பெனியார், மதுரை பால
விநோத சங்கீத நாடக சபா,
சென்னை ஸ்ரீ பாலவிநோத நாடக சபையார்
முதலியோர் நடத்திவரும்

சாந்தகுண

# சக்குபாய் சரித்திரம்

இது
உடுமலை: ஸ்ரீமான் சரபகவி மாணவரும்
சென்னை: ஸ்ரீ பாலவிநோத நாடக சபாவின் உபாத்தியாயருமான
சங்கீத சாஹித்திய சந்தவண்ணச் சரபம்
நாடகாசிரியர் :

**ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்**

எழுதியது.

REGISTRAR OF
OFFICE

பிரசுரித்தவர்கள் :

**B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**
திருமகள்விலாச அச்சியந்திரசாலை,
சென்னை.

காபிரைட்]  1933.  [விலை அணா 6.

# முகவுரை

ஸ்ரீ மஹா பக்தவிஜயத்தின் ஓர் சரித்திரமாகிய "சக்குபாய்" என்னும் நன்னுமமேதயம் வகித்த வுத்தம கற்பரசியின் கதையை நாடக ரூபமாக சில நடிகரே நடிக்கக் கண்டிருக்கிறேன். எனினுங் காலக்ஷேப பாகவதர்களால் இக்கதை வெகு விமரிசையாக உபந்யாசிக்கப் படுகிறது.

1931-வது வருஷம் ஏப்ரல்மாதத்தில் கும்பகோணம் அரண்மனை தியேட்டரில், எனது ஸ்ரீ பாலவிநோத நாடக சபா பாலியர்களைக் கொண்டு நான் நாடகம் நடத்திவரும் சமயம், அவ்வூர் "ஸ்ரீசாரதா விலாச சபா" டைரக்டரான ஸ்ரீமான் A. R. ராஜகோபால் செட்டியாரவர்கள் "உஷாபரிணயம்" "சக்குபாய் சரித்திரம்" என்னுமிரண்டையும் நடத்தும்படி அவர்கள் சபையில் அச்சிட்ட அச்சுக்காபியையும் இலவசமாகக் கொடுத்தருளினர்.

இவற்றில் பாணாசுர உபாக்யான மென்னும் உஷாபரிணயக் கதையை அவர் கொடுத்த அச்சுப்பிரதியி லுள்ளபடியே வசனங்களுக்கேற்ற பாடல்களமைத்து விழுப்புரம் ஸ்ரீ கணபதி விலாசத் தியேட்டரில் நடத்தி நற்பெயர் பெற்றனம்.

இரண்டாவதாக சக்குபாய் சரித்திர அச்சுப்பிரதி சபா நடிகர்கள் நடத்துவதற் கேற்றவா றிருந்ததனல் அதில் சிலதை மாற்றி எழுதி நாடக நடிகர்களுக்கேற்றபடி நடத்தவேண்டும் என்னும் பேராவலால் பக்தவிஜயப் புஸ்தகத்தில் சக்குபாயின் சரித்திரத்தைப் பூராவும் வாசித்து ஜனரசிகத்துக் கேற்றபடியும் நாடகமேடைக் குகந்தபடியும் எழுதவேண்டுமென் றெண்ணினேன். நாடக வேலையின் சிரமம் எழுதத் தாமதமானதுபற்றி எனது மாணவர், நாடகாசிரியர் சிதம்பரம் C. D. குஞ்சிதபாதம் பிள்ளையவரிடம் இக்கதையைக் கொடுத் தெழுதும்படியாகக் கட்டளையிட்டேன்.

அவரது ஓய்வு நேரங்களில் இதை எழுதி முடித்து எனக்கனுப்பினர். அதிலும் சிற்சில இடங்களில் மாற்றவேண்டியதை மாற்றியும், திருத்தவேண்டியதைத் திருத்தியும், பாலியர்களுக்குப் பாடம் கொடுத்து, புதுச்சேரி முகாமில் இந்நாடகத்தை நடத்திவைத்தேன். அந்நகர் வாசிகளும், ஏனைய நாடகாபிமானிகளும் கோரிய வண்ணம் இக்கதையையும் அச்சிடலானேன்.

எனக்கதிக சிரமமின்றியும் இந்நாடகத்தைப் பூர்த்தியாக எழுதியுங்கொடுத்த எனது மாணவர் C. D. குஞ்சிதபாதம் பிள்ளையவர்களின் நன்றி என்றும் மறக்கத்தக்கதன்று மென்மேலும் அவரது நாடகாசிரியப் புகழ்பரவி என்போன்ற தலைமை ஸ்தானம் வகிக்க எனது நல்லாசீர்வாதம் அவருக்குண்டாகுக.

அன்றியும், இந்நூலின் சகல வுரிமைகளும், சென்னை: மெஸர்ஸ் B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ் அவர்களுக்கே வுரியதாதலின், மற்றவர்கள் இப்புஸ்தகத்தையேனும், இதிலுள்ள பாடல்களையேனும் அச்சிட்டு வெளியிடில் புஸ்தக ரிஜிஸ்டர் சட்டப்படி சகல நஷ்டத்திற் காளாவார்க ளென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்னை.
17-3-33

அன்பன்:
**கவிராஜ் ச. சு. சங்கரலிங்கன்.**
நாடகாசிரியன்.

---

## நாடக நடிகர்கள்

| | |
|---|---|
| மூர்த்திராவ் | மித்ருராவின் தந்தை |
| மித்ருராவ் | சக்குபாய் புருஷன் |
| திகம்பரராவ் | மூர்த்திராவ் நண்பன் |
| பரமாத்ம பாகவதர் | ஹரிதாசர் |
| கிருஷ்ணன் | பக்தரக்ஷகன் (துவாரகாதிபதி) |
| சரோஜினிபாய் | சக்குபாய் மனைவி |
| சக்குபாய் | (கதாநாயகி) மித்ருராவ் மனைவி |
| யமுனாபாய் | மூர்த்திராவ் மகள் |
| ஞானபாய் | அயல்வீட்டுப் பெண் |
| மீனாபாய் | அயல்வீட்டுப் பெண் |
| காமம்மாள் | ஓர் பிராமண ஸ்திரீ |
| ருக்மணி | கிருஷ்ணன் மனைவி |
| சுந்தரி | அயல்வீட்டுப் பெண் |
| கருடன் | கிருஷ்ண தூதன் |

ஜோகி, பக்த கோஷ்டிகள், மாய மித்ரு, மாய சக்குபாய், மாய சுந்தரி முதலியோர்.

நாடகம் நிகழிடம்:

**கரவீரபுரம், பண்டரிபுரம்.**

---

Copy Right and Rights of Translation in any other Languages are reserved by the Publishers.

உ

ஸ்ரீ பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:

# சாந்தகுண
# சக்குபாய் சரித்திரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 SEP 1933
MADRAS

காப்பு - வெண்பா

பக்தவிஜ யத்திலகு பக்தரெலாம் போற்றிமகிழ்
சத்யவதி சாந்தகுண சக்குபாய்—சித்திபெற்ற
செந்தமிழ்ச்சரித்திரத்தைச் செப்புதற்குக் காப்புதவுந்
தந்திமுகத் தெந்தை சரண்.

சீன்—1. இடம்—சமையலறை.

நடிகர்:—சக்குபாய், சரோஜினி.

[சக்குபாய் அடுப்பில் பாலைக் காய்ச்சிய வண்ணம் (கையில் ஸ்ரீ கிருஷ்ண உருவத்தை யேந்தி) கிருஷ்ணத் தியானம் செய்கிருள்]

சக்குபாய் பாட்டு

(கந்தா காருண்யனே என்ற மெட்டு)

பல்லவி

கண்ணா காருண்யனே கண்பாரையனே (கண்)

அநுபல்லவி

அண்ணலேயுனையன்றிவேறு ஆதரவெனக்காரையா
வண்ணனே ஸ்ரீராமச்சந்த்ர வரதனேயெனக்காரையா
வந்தாளத்தடையா வாடுறேனேயெய்யா (கண்)

(தொகையறா)

கோபிகா ரமணஸ்ரீ கோவிந்தா வைகுந்தா
கோபால பூபாலனே
பாபிகா துஷ்டநிக் ரகசிஷ்ட சம்ஹாரா
பாகவத ரனுகூலனே

பாட்டு

தஞ்சந்தந் தருள்வாய் தற்காத்தருள்வாய் (கண்)

சக்குபாய் வ-ம்:—ஆ கருணகர காருண்யமூர்த்தியே! கண்ணு! மா மணிவண்ணு! நின்னையல்லால் எனக்கார் துணை. ஐயா! ஆலிலை மேற்றுயின்ற மெய்யா! ஆதவகுலதிலகமான வாமனரூப துய்யா! நான் படும்பாடு செப்பத்தரமோ? ஒப்பிடலாமோ? ஐயனே! நினது சாமளஸ்வரூப சகஸ்த்ர நாமத்தை இத்தரணியிலுள்ளோர் செப்பிடில் உமது திருவடி நீழலைத் தப்பாதடைவர் என்பதைச்சொல்லவும் வேண்டுமோ? திவ்வியமங்கள குணகரனே.

சக்குபாய் பாட்டு

(மீனுட்சிரமண என்ற மெட்டு)

பல்லவி

கண்ணுகோபாலா காருண்யசீலா—கமலக் (க)

அநுபல்லவி

எண்ணுது மெண்ணுகின்றேன்
என்மனங் குண்ணுகின்றேன்
இடரே தவிர்க்கயிவ் விடமேவந்தருள்
சடமேமகிழ்ந்திடத் திடமேதந்தருள் (க)

சரணம்

ஏழைக்கிரங்குமையா என்றுயர்தீருமையா
ஏகபராபர ஜோதிசுகானந்த
சாகரமீதினி லேதுயில்மாதவ (க)

வ-ம்:—ஐயனே! நான் உன்னையல்லால் வேறொருவரையும் துணையெனக் கருதவில்லை. கோபாலா! இப்பாழும் பிரபஞ்ச வாழ்க்கை அனித்யமென நம்பியிருக்கும் என்னை, நித்தியவாழ்வு சதமென நாடி ஏகபோகவைபவத்தைக் கருதிநிற்கும் மக்களிடையே புக்கி வாழாமலிருக்கவும்; சதா நின் பாதாரவிந்தந் தொழுது பரம சந்துஷ்டியாக இருக்கச்செய்வாய். பண்டரிநாதா! பரமானந்த வேதா! பக்தர்கள் சமேதா.

[மெய்மறந்து நிற்க, பால் பொங்கி வடிகிறது மாமி சரோஜினிபாய் வெளிவந்து]

சரோஜினி வ-ம்:—(கோபமாய்) ஐயோ தெய்வமே! இச்சண்டாளி (சக்கு) வந்து என்குலத்தை இப்படியுங் கெடுக்க முற்படலாமா? (அடுப்பில் பால் பொங்குவதைப் பார்த்து) அடீ பாபி! அந்யாயமாகப் பாலெல்லாம்பொங்கி வீணேபோயிற்று. இவளுக்கென்ன

இவ்வித அகங்காரம். ஏண்டீ சக்குபாய்! முகத்தைப் பார்; என்னடிபவுஷு. அடியே பால் எங்கேயடி காணும்; இதென்னடி கையில்.

சக். வ-ம்:—மாமி! சகலலோக புவனங்களையும் காத்து ரக்ஷித்தருளும் காருண்ய மூர்த்தியான ஸ்ரீகிருஷ்ண விக்ரகம்.

சரோ. வ-ம்:—ஆ அப்படியா! மஹா திமிர்கொண்டவளிவள். ஏண்டீ இதுதானு குடும்பம். உனக்கும் பக்தியா "நாய்கெட்ட கேட்டுக்குத் தேங்காய்ப் பாலுஞ்சோறு" என்பதுபோல் நீ இருக்கும் இருப்புக்கு இதுவேறு வேண்டுமா? உம்; உன்னை என்னசெய்கிறேன் பார்.

[சக்குவைச் சரோஜனி அடிக்கின்ருள்]

## சரோஜினி பாட்டு

### (என்னடிமேத்தத்தளுக்கு என்ற மெட்டு)

பல்லவி

என்னடி சும்மா எதிர்த்துப் பேசுருய்
நானறிவேன் போடி (என்)

அநுபல்லவி

பன்னடிவுனக்கேனிந்தப் பராக்ரமம்வந்திடலானது
என்னடிபடவேயிப்படி இறுமாப்புடனேநின்றுநீ (என்)

சரணம்

பால்கொதித்தடுப்பிற் பாயுதடிசும்மா
பார்த்தும்பாராததும் போலிருக்கத்தெம்மா
மேலுனைக்கைக்கொண்ட நாயகன்ப்ரியமா
மீறியெனுடன்வா தாடி
தூறுகள்செய்கிரு யோடி (என்)

சரோ. வ-ம்:—அடி லவுண்டி! அடி நிர்மூடி! அடி குடிகேடி! அடி வாயாடி! பால் கொதித்துப் பொங்கி அடுப்பில் விழுவது தெரியாது அசையாமல் தன்னை மறந்து நிற்பதேனடி பஜாரிசிறுக்கி. இப்படித்தானே என் குடித்தனத்தைப் பாழ்ப்படுத்துகிருய்.

[அடிக்கிருள்]

சக், வ-ம்:—மாமி! மாமி! என்னை அடிக்கவேண்டாம். தாங்கள் என்னை அடிப்பதாலும், உதைப்பதாலும் என் தேகம் நோகுமே என்று நான் சஞ்சலப்படவில்லை. காடுபோன்ற என் தேகத்தில் மிர்துவாகிய தங்களது கரங்கள்பட்டு வலி எடுக்குமே என்று வருந்துகிறேன்,

## சக்குபாய் பாட்டு

(சாமியென்னை யடிப்பது என்ற மெட்டு)

பல்லவி

மாமியெந்தன்மேலிந்த மர்மமாகுமா என் (மா)

அநுபல்லவி

ஆமிந்தசெய்கைதன்னை அறிந்துசெய்யேனேநானே
தாமிந்தவாரடிக்க தர்மமா எந்தன் (மா)

பகவான்மே லன்புவைத்துப்
பதைத்துநின்றேன் தனித்துப்
பால்பொங்கியதை நானறியேனே எந்தன் (மா)

வ-ம்:—மாமி! தாங்கள் இவ்விதமென்னைக் கோபித்தல் கூடாது. மனதிற் களங்கம் வைத்து நானெக்காரியத்தையும் செய்யவில்லை. உண்மையில் பகவத்நாமஸ் தோத்திரத்தால் என்னை மறந்து ஏங்கி நின்ற சமயம் பால் பொங்கி வடிந்துவிட்டது. அதற்காக என்னை மன்னித்தருள வேண்டும் மாமி.

சரோ. வ-ம்:—ஆ! அப்படியா சமாச்சாரம். தடிச்சிறுக்கி! என்னுடன் எதிர்த்துப் பேசவும் ஆரம்பித்துவிட்டாயா? பட்டிமகளே; வாடிவுள்ளே. உன்னை என்னசெய்கிறேன் பார்.

[சரோஜனி சக்குபாய் கூந்தலைப் பிடித்திழுக்க சக்குபாய் அழுதுகொண்டே போகிறாள்]

(சீன் முடிவு)

---

**சீன்—2.** **இடம்—பூஜாக்ருஹம்.**

நடிகர்:—மூர்த்திராவ், மித்துருராவ்.

[சக்குபாயின் மாமன் சரோஜினியின் புருஷன் மூர்த்திராவும் சக்குபாயின் புருஷன் மித்ருராவும் ஸ்ரீ கிருஷ்ண விக்ரகத்திற்குப் பூசைசெய்து நிஷ்டையிலிருக்கின்றனர். சக்குபாயின் கூக்குரலைக்கேட்ட மூர்த்திராவ் திடுக்கிட்டெழுந்து]

மூர்த். வ-ம்:—அடே மித்ரு! இங்கே வா. என்னடா கஷ்டம்; உன் தாயார் சரோஜனி செய்யுங் கொடுமை யார்தான் சகிப்பார்கள்.

உன்னாலல்லவோ இவ்வளவிற்குங் காரணம் ஏற்படுகிறது; நட பார்ப்போம்.

மித்ரு. வ-ம்:—தந்தாய்! நான் என் செய்வது? என் தாயைக் கண்டாலோ என்னுடல் கலங்கி வாடுவதென்றால், அவள் (சக்கு) எம்மாத்திரம்.

மூர். வ-ம்:—அந்தக் கிழட்டுக் கழுதைக்கு இவ்வளவு திமிர் தண்டமா? அறியாத பெண். அதிலும், பக்திவினயத்திற் சிறந்தவள். அவளைப் பிடித்து இந்தவிதம் செய்வதென்றால் யாருக்குப் பொறுக்கும்.

மித். வ-ம்:—இதைத் தாங்கள்தான் கவனிக்க வேண்டும். என்னைப் பத்துமாதஞ் சுமந்துபெற்றத் தாயின் கதையை நான் படிப்பது தகாது.

மூர். வ-ம்:—நல்லதிருக்கட்டும்; வாடா அம்மூதேவியைப்போய்ப் பார்க்கலாம். [இருவரும் போகின்றனர்]

(சீன் முடிவு)

---

**சீன்—3. இடம்—சமையலறை.**

நடிகர்:—மூர்த்திராவ், மித்துருராவ், சரோஜினி, சக்குபாய்.

[சரோஜினி சக்குபாயை அடித்துக் கொண்டிருக்க மூர்த்திராவ் மித்ருராவுடன் வெளிவந்து]

மூர்த். வ-ம்:—சரோஜனீ! இதென்ன விபரீத செய்கையாகயிருக்கிறது. சதா உன்னுடைய தொல்லையே பரம சங்கடமாயிருப்பதுடன் பகவத்நாமார்ச்சனை செய்வதற்கும் இடையூரேற்படுகின்றன. ஒருநாளா? இரண்டுநாளா? ஒவ்வொருநாளும் விடாது ஓர் யுவதியை (சக்குவை) வதைத்தல் பாபமல்லவா.

சரோ. வ-ம்:—(வீராவேசத்துடன்) என்ன என்ன. உம்; அப்படியா உமக்குக் கோபம் வந்துவிட்டது? நீர் செய்யுமே இந்த அடுப்பங்கரை வேலையை. ஓஹோ தண்டசோற்றை யுண்டுத்திரியும் திமிரா நீர் அதிகாரஞ் செய்யவந்தீர். இப்படி வாருஞ் சொல்கிறேன். [புருடனைத் துரத்த மூர்த்திராவ் ஓட்டமெடுத்தல்]

மித்ரு. வ-ம்:—தாயே! ஏனம்மா இவ்விதம் உபத்திரவஞ் செய்கிறீர்கள்; தங்கள் மகளென்றாலும், மருமகளென்றாலும் இரண்டும் ஒன்றல்லவா? தாயே! அவள் சின்னஞ் சிறியவளாயிற்றே.

அவளை (சக்குபாயைத்) தாங்கள் சந்துஷ்டியாக இருந்துவரும் படி செய்து கண்குளிரப் பார்க்கலாகாதா அன்னையே.

சரோ. வ-ம்:—(மகனை அறைந்து) அடா தடிப்பயலே! நீயா எனக்கு புத்தி புகட்டவந்தனை? நீயுங் கெட்டாய் கூட அவளுஞ் சேர்ந்து கெட்டாள். அவளைத் தூக்கி என் சிரசின்மேல் வைத்துக் கொண்டு என் மருமகள் மருமகள் என்று வீதிவீதியாய்ச் சுற்றி வரவா சொல்லுகிறாய். ஏண்டா மந்தபுத்தியுள்ள மடையா? உனக்கு அவ்வளவு அகங்காரமா? இதோ உன்னை லேசில் விட்டேனென் றெண்ணாதே.

[மித்ருராவுக்கு அடிகொடுக்க விட்டால் போதுமென்று ஓட்டமெடுக்கிறான்]

சரோ. வ-ம்:—அடி சக்கு! இங்கு வாம்மா. முகத்தைப்பார்; என்ன பவுஷாக இருக்கிறது. உன்னை யார் என்ன செய்தார்கள். "நீலிக்குக் கண்ணீர் நிமையிலே" என்றபடி, உன்னையடித்தேனா ஹிம்ஸித்தேனா? என்னடி சும்மா விளையாட்டாக ஒரு தட்டுதட் டினதற்கு இவ்வளவு பசப்புத்தனமா? போகட்டும் நீ நல்ல நிலைமையில் இருக்க, இவ்விதஞ் செய்கிறேன். இப்போது நமது வீட்டில் வருபவர்களுக்கு ரொட்டி தட்டவேண்டாமா? அதற் குத் தக்க மாவுயிருக்கின்றதா யில்லையாவென்று சொல்லுவது யார் கடமை

சக்கு. வ-ம்:—மாமி! தாங்கள் செய்வதெல்லாம் என்னுடைய நன் மைக் கல்லவா. மாமி! எனக்குற்ற தாய்தந்தையர்கள் நீங்கள் தானே; எனக்கு வேறு யாரிருக்கின்றார்கள். தாங்களும், எல் லாம்வல்ல ஜகத்காரண தயாநிதியாகிய ஸ்ரீபண்டரிநாதனுந் தான் துணை. அடியாள் என்ன செய்யவேண்டும் தெரிவியுங்கள்.

சரோ. வ-ம்:—என்ன பண்டரிநாதனா! அவன் எங்கடி யிருக்கிறான்? உனக்கு விலாப்புடைக்க அவனா கொட்டுகிறான். தரித்திரம்பிடித் தவளே. சதா பண்டரிநாதன் பண்டரிநாதன் என்று சொல்லி என் வீட்டைப் பாழ்படுத்த நினைத்துவிட்டாய்; உன் துடுக்கை ஒடுக்குகிறேன்பார். இதோ யிருக்கும் எந்திரத்தில் இக் குறுணி அரிசியையும் ஒரு நொடியில் மாவாக்கவேண்டும் தெரியுமா?

## சக்குபாய் சரோஜனி தர்க்கம்

(கல்லோசொல்லாய் மனது என்ற மெட்டு)

சக்கு. மாமினான் என்னசெய்வேன்
மாவரைக்க வகையறியேன் (மா)

சரோ. நேமிக்குஞ் சொல்லைமீறி
நின்றுபேசுறாய் வதைப்பேன் (நே)

சக்கு. கோபமதைத் தான்விடுத்தேன்
குறைகளைநீ ரகற்றிவையும் (மா)

சரோ. தாபமுடன் மனம்பொறுத்தேன்
தக்ஷணமா வரைத்திடுவாய் (நே)

சரோ. வ-ம்:—ஆஹா! அப்படியா? மீறிப்பேசும் உன் வாயைக் கிழிக்கிறேன் பார். நான் ஏதோ போனல் போகுது மகன் தொட்டுக் கட்டிவிட்டானே என்று புண்ணியம் பார்த்தால் ஏதேதோ பேசுகிறாளே. சீ! சீ! எழுந்து அப்பாலே போ நாயே.

சக்கு. வ-ம்:—அந்தோ! அனாதரக்ஷகா! ஆபத்பாந்தவா! பாஞ்சாலியினது மானங்காத்த மகிபா! நின்சோதனையாயிது; நான் புகலும் வார்த்தையை யின்னதென்றுணராத யென் மாமி என் என்னை இத்துயருக்காளாக்கவேண்டும். என்னைக்காத்து ரக்ஷித்தருளல்வேணும் காருண்ய ப்ரபூ!

சரோ. வ-ம்:—ஏண்டி சக்கு! இன்னமுமா தாமதஞ் செய்கிறாய். இந்தா யிதோ யிருக்கின்றது இந்த (அரிசியை) அரைத்துவிட்டு மறுவேலை பார். [மூர்த்திராவ் மறைவாக வந்து, இது செய்கையை கவனித்து]

மூர். வ-ம்:—அஹா! அந்யாயக் காதகி அறியாச் சிறுமியைப் பிடித்து என்னென்ன அக்ரமங்கள் செய்கிறாள். (யோசித்து) அந்தோ! இக்கொடியாளின் கொடுமைக்கு நானென்செய்வது.

## பாட்டு

(மடமயிலே தயைசெய் என்ற மெட்டு)

பல்லவி

என்செய்வேன் ஸ்ரீகிருஷ்ணா-அவ
ளிப்படிச் சதிபுரிந்தால்
சொற்படிமனம் பொறுத்தேன் (செய்)

அநுபல்லவி

முன்செய்ததீவினை போலேனைவாட்டி
மோசக்கருத்துடன்விஸ் வாசத்தைக்காட்டி
நன்மையொன்றுமிலாத நடத்தையிற்கூட்டி
நாளுக்குநாளாகவென்னை வாட்டுறாள்காமாட்டி (என்)

[போகின்றார்]

சரோ. வ-ம்:—அடியே அடி சக்கு! என்னடி இறுமாப்புடன் நின்றுகொண்டிருக்கின்றாய். ஏண்டி லவுண்டி! அரையடி; அகங்காரங் கொண்டவளே. [போகிறாள். சக்குபாய் அரிசி கூடையைத் தூக்கிக்கொண்டு]

## சக்குபாய் பாட்டு.

(சாத்மீகம் என்ற மெட்டு)

பல்லவி

நாராயணாஹரி நாராயணனே ஸ்ரீ
ராமாவதாரரகு நாமாவதார ஸ்ரீ (நா)

அநுபல்லவி

காரணமெய்ப்பொருளே காத்தளிப்பாயருளே
பார்த்தனுக்குகந்திட்ட பக்தவத்ஸலனான (நா)

தொகையரு

துஷ்டரை கருவறுக்கத் தோன்றிய சுத்தசாட்குண்யா
இஷ்டருக் கிடராகாதென் குலமணியாய்வந்த கண்யா

அநுபல்லவி எடுப்பு

சிந்தைகலங்கிறேனே செந்தாமரைப்பாதனே
வந்தென் துயர்தவிர்ப்பாய் வரதகுணாளனான (நா)

வ-ம்:—ஹே தாமோதாரா! சங்குசக்ரா! கேசவா! மாதவா! அச்சுதா! அரவிந்தாக்ஷா! ஆயா! மாயா! அனந்தசயனா! காளிங்கநர்த்தனா! கோவர்த்தனகிரிதாரா! நான் படும்பாடுநினது செவியிற் கேட்கவில்லையோ. இவ்வனிதையாளான யென்னை இக்கோலத்திற்காளாக்கி அகமகிழ்கின்றனையோ? ஐயா! இனி என்னால் இப்புவனங்களிலிருக்க முடியாதையா கார்முகில்வண்ணா! கஞ்சமலர்க்கண்ணா! அண்டபுவன சராசரங்களை யுண்டாக்கி ஓர் குடையின்கீழவர்களை யிருத்தி காக்குங் கோவிந்தா! நானெவ்வா றுய்யப் போகின்றேன் எனது வஞ்சந்தீர உன்னையே தஞ்சமென் றெண்ணிய எனது நெஞ்சினில் உமது திவ்விய தேஜோன்மயமான உருவம்தோன்றி யென் கண்களுக்கெதிரே மிளிர்கின்றதப்பா. என்னைக் காருங் கனககுண்டலதாரனே! பண்டரிபுரநாதனே!

[சக்குபாய் மெய்மறந்த பக்தி பிரவாகத்தால் சோகமுற்று விழுந்து கிடத்தல் பகவான் ஸ்ரீ கிருஷ்ணகோலத்துடன் காக்ஷியளித்து மறைதல்]

## ஸ்ரீ கிருஷ்ணன் பாட்டு

(அந்தமிகுந்த முகுந்தன் என்ற மெட்டு)

எந்தன்மனதிற் குகந்தமனோன்மணி
வா வா நீ வா வா நீ வா வா வா (எந்)

சிந்தைநொந்திடா தெந்தன்கருணைத் தந்தேனித்தநி
வந்தருள்பெற (எங்)

தொகையரு

துயரே மிகுந்திடா தகமே மெலிந்திடா
துண்மைநீ வாழ்ந்து வருவாய்
பயமே யினியுனைக்கணமே நெருங்கிடா
பாதுகார்த்தேன் மன மகிழ்வாய் (எ)

வ-ம்:—என்னே ஆனந்தம்! ஆனந்தத்தினும் ஆனந்தம் பிர்ம்மானந்தம்; நமது செவிக்கினிய பரமசந்துஷ்டியான நாம நாமங்களின் பூசனை தொனிக்கின்றன. இவ்வளவு மனங்கசியா சிந்தனையுடன் நம்மைப்பூஜித்தவர்கள் இவ்வுலகின்கண்ணே இதுவரை பார்த்தறிகிலேன். ஹே குழந்தாய்! 'சக்குபாய்' நீ என்றுஞ் சிரஞ்சீவியாக யிருந்து அழியாப் பேரின்பவீட்டை யடைய நான் அனுக்ரகஞ் செய்கின்றேன். ஆயினும், நீ படும்பாடெல்லாம் உனக்கல்ல அவை எனக்கே! நீ கஷ்டமுறும்படியாக உனக்குத் தோன்றுமேயொழிய அவை உன் உள்ளத்தே நாடாமல் குளிர்ந்தே இன்பம்பெருக ஆனந்தமடைவாய். என்னுடைய பக்தர்கள் எத்தகையவிதமான தொண்டுகள் புரிந்து என் பாத சேவைகளைப் பெற்றனர். எனினும், உன்போல் பஞ்ச பூதங்களையொடுக்கி ஏகவுறுதியுடன் வைராக்யஞ் சாதித்தவர்கள் இல்லை பொறுப்பாய் திடம்பெறுவாய். எனது தரிசனக் காக்ஷியானது உனது மனசாக்ஷிக்கே அத்தாக்ஷியாகத் தோன்றும் கூடியவிரைவில் நமது பாதாரவிந்தஞ்சேர ரக்ஷித்தருள்வோம் கலங்காதே.

[ஸ்ரீகிருஷ்ணர் ஆசீர்வாதந்தந்து மறைதல். சக்குபாய் கண்விழித்து கடவுளினது பாதசேவையின் மகிமையுணர்ந்து ஸ்மரித்தல்]

## சக்குபாய் பாட்டு

(தேவாதேவா என்ற மெட்டு)

பல்லவி

கண்டேன்கண்டேன் கண்ணுவுன்றன்
காக்ஷியைக் கண்ணாரவே (க)

அநுபல்லவி

அண்டினேனென்னுன் விண்டுவான பண்டரிபுரத்தோனே (க)

சரணம்

பக்தஜனநித்யமஹா வுத்தமக்காருண்யனே
இத்தநிநான்நத்தினேனுன்சித்தம் வைத்தாள்புண்யனே (க)

வ-ம்:—அற்புதம்! அற்புதம்!! ஐயனே சாமளஸ்வரூப சங்கு சக்ர தாரராய் வந்தவுமது சேவை யெவர்க்குக் கிட்டுமையயனே உமது செந்தாமனை மலர்போன்ற கண்ணொளியானது அவ் விண்ணவர்க்குங் கிடைக்காதென்றால் இம்மண்ணுலகிலுதித்த யிப்பாவையாளுக்குக் கிடைத்தமா பெரும் புண்ணியம் எனக் குக்கிட்டியதானது. நான் பூர்வஜென்மத்தில் செய்த சுகிர்த மல்லவா தேவனே நீர் "இத்தருணம் வாடும் பயிரைச் செழிக் கப்பொழியும் மேகம்போல்" என்முன்தோன்றி கருணையை யீந்த வள்ளலே! நாவிஷ்ணு, ப்ரதிபதிஹீ என்றபடி ஸ்ரீவை குண்ட நிஹேதனனாய் அவாப்த சமஸ்தகாமனாய் நித்யமுக் தானுபாவனாய் விளங்கக்கூடிய வராகிய ஸ்ரீமந்நாராயண மூர்த் தியினது அம்ஸலேஸத்தைப்பெற்றவர்களே அரசுரிமையையும் அஷ்டஐஸ்வர்யங்களைரிம் அடைவார்களென்பது வேதவாக்கி யம் அந்தவித பலாபலன்களைவிட மேலான பதவியையடைந்த பாக்யவதியானேன் கர்த்தனே? இனி எக்காலம் நான் உமது திருமேனியினது சொரூபங்காணும் பெரும்பேற்றை யடை வேனோ அறியேன் அந்தோ என்செய்வேன்.

[மாவரைத்தவண்ணம் எந்திரத் தின்மீது மூர்ச்சித்து விழுந் திருத்தல்]

சரோ. வ-ம்:—(வெளிவந்து)பார்த்தனையா! இந்தச் சிறுக்கியின் அகங் காரத்தை அடி சக்கு சக்குபாய் (என்று முதுகில் அறைகொடு க்க சக்குபாய் திடுக்கிட்டெழுந்துநிற்றல்) நான் உனக்கிட்ட கட் டளையை நிறைவேற்றாமலும் மாவரைக்காமலும் இவ்விதஞ் செய்வது தகுமா மானங்கெட்டவளே.

சக். வ-ம்:—மாமி! என் கோபித்துக் கொள்ளுகின்றீர்கள் நான் தங்க ளிட்டகட்டளைப்படி நிறைவேற்றினேன் முன்பின்செய்தறியாத வளானதினால் என் மெய்ம்மறந்து சோகமுற்றேன் மாமி! பொறுத்தருளல் வேண்டும்.

[மூர்த்திராவ் வெளிவந்து நிற்றல்]

சரோ. வ-ம்:—சரி! சரி! உன் வாயைமூடு புறப்படு இன்னும் ஆக வேண்டிய காரியாதிகளைக் கவனிக்கவேண்டாமா? உம்?

[இருவரும் போதல் மூர்த்திராவ் மறைவிலிருந்து கண்டு விசன முறல்.]

மூர். வ-ம்:—ஆஹா! இதென்ன கொடுமை. இப்படியும் ஓர் மனைவி உலகத்திருப்பாளா? ஐயோ அறியாச் சிறுமி. அதிலும், பண் டரிநாதன் பாக்கியம் பெற்றப் பாவை. அவளை இவ்விதம் இம் சிப்பது ஆருக்கடுக்கும். ஏ பக்தவத்ஸலா! நானென் செய்வேன்

தட்டிக் கேட்டால் என்னையும் விரட்டுகின்றனளே. குழந்தை மித்ருராவும் இது விஷயமாக நாளடைவில் மனமெலிந்து வாடுகின்றானே.

### பாட்டு

(ஏதுக்கோ சென்றீர் என்ற மெட்டு)

கண்ணிகள்

ஏதுநான்செய்வேன் வுலகி
லெவ்விதமுய்வேன்
மாதுயென்மனைவி செய்யும்
வர்மமென்சொல்வேன். (ஏது)

சக்குபாயென்னும் நல்ல
தர்மியையடித்து
மிக்கவேதனை செய்யும்
வேலையைநினைத்து (ஏது)

பண்டரிநாதா என்னைப்
பாதுகாக்கவா
விண்டுவேயெந்தன் மன
விசனந்தீர்க்கவா. (ஏது)

[போகின்றார்]

(சீன் முடிவு)

---

**சீன்—4.** **இடம்—ஏகாந்தம்.**

**நடிகர்:—மித்ருராவ், சக்குபாய்.**

[மித்ருராவ் தன் தாய் செய்யுங் கொடுமையை நினைந்து சக்குபாய் விஷயமாகப் பரிதாபப்படுகிறார்]

மித். வ-ம்:—ஆ! கொடுமையிலும் மகாகொடுமையாக வல்லவோ யிருக்கின்றது. நான் முன்செய்தவினையை இப்போது அனுபவிக்கின்றேனே ஆ கடவுளே? உமது சோதனையாயிது. நான் பல புருடரையும் பெண்டீரையும் ஒன்றுசேர்க்காது பிரித்துவைத்தேனோ, அக்கொடூரங்களெல்லாஞ் சேர்ந்து எங்களிருவரையும் பிரித்து வைத்திருக்கின்றதோ அறியேன்: என்தாயோமகா கொடியவளாயிற்றே அவள் (சரோஜனி) செய்யும் இத்துஷ்ட காரியங்களுக்கு சித்ரவதை செய்யினும் தீராது ஐயோ? நானும் என்மனைவி சக்குபாயும் சந்தோஷமாக யிருந்துவாழக் கொடுத்து

வைக்கவில்லை என் செய்வது; தாயோ நம்மைப் பத்துமாதஞ் சுமந்து பெற்றமர் தாவல்லவா! அவளாலல்லவோ நாம் இவ்விதம் வெளிவரலானோம் எவரை நோவது

"ஊழிற் பெரு வலியாவு ளமற்றொன்று
சூழினுந்தான் வந்துறும்" (குறள்)

என்றபடி பூர்வ கன்மவினை சூழ்ந்து வாட்டுகின்றது. எல்லாம் நம்மைப்படைத்த பரமாத்மாவின் கட்டளைப்படியே நடக்குமல்லவா' ஆ! என்னே விதியின் மகிமை.

## பாட்டு

(ஹரி ஹரி மாதவா என்ற மெட்டு)

விதிவிதி என்பதை விலக்கிட முடியா
தலைகுறேன் நானிவ் வவனியில் தானே (வி)

வேதா நீதா விமலநற் போதா
பாதாம்புயமதைப் பணிந்தேன்விநோதா
பார்புகழ் பண்டரி நாதா (வி)

ததிததி கார்த்திடக் கருணைவை நேயா
தரணியோர் போற்றுஞ் சாமள மாயா (த)

கீதப்ரக்யாதா கீர்த்தியுந் தாதா
சீதா மனோஹரா திவ்ய சங்கீதா
திருவுளம் வைத்திடவாதா (வி)

வ-ம்:—சந்ததமும் சகல ஜீவாத்மாக்களும் துதித்துவணங்கும் நந்த கோபாலா? நானியம்பும் வாக்கியங்களைப் பரிபாலிக்கலாகாதா நீவிர் பிதுர்வாக்யபரிபாலனஞ் செய்ததுபோல் நானும் எனது பெற்றோர்களின் வார்த்தைகளை மீறமனமில்லாது மாய்கிறேன் சற்றே தயவுசெய்து சாத்மீகம்வாய்ந்த "சக்குவை" காத்தருளும் காமனையீன்ற கார்முகில் வண்ணா? (விசனித்து நிற்கிறான்)

[சக்குபாய் வெளிவந்து பெண்களுக்குற்ற சகல குணங்களும் பொருந்த மும்முறை வலம்வந்து வணங்கிநிற்றல்.]

மித். வ-ம்:—கண்மணீ சக்குபாய் நீபூர்வகாலத்தில் செய்தவினை உன்னைச் சூழ்ந்துவதைக்கின்றது நான் நீ படும் பாட்டைக்கண்டும் மனமிளகா மாபாவியாக யிருக்கின்றேன் உம் என்செய்வது.

சக். வ-ம்:—நாதா தாங்கள் என்மீதுள்ள அன்பின் மிகுதியினால் தாங்களும் மாமியிடத்தில் கஷ்டமடைகின்றீர்கள் மாமி எனக்கு

நன்மையைச் செய்கின்றார்களே தவிர வேறில்லை இதற்காகத் தாங்கள் வருந்தவேண்டாம் காதலா நடப்பது நடந்தேதீரும்

## பாட்டு தர்க்கம்

(ஐயாபழனிமலைவேலா என்ற மெட்டு)

கண்ணிகள்

சக்கு. மன்னவரே என்னருமைநாதா நல்ல
மனதுவருந்துவதென் நீதா
என்வினைப்பயன்விலகிப் போமோ அதை
எண்ணியேவருந்துவது நலமோ (மன்)

வ-ம்:—பிராணகாந்தா? படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலுக்கும் முதன்மையாய் பாப்ரம்மசொரூபமய்விளங்கும் எந்தகர்த்தனுண்டோ அக்கடவுளாலாக்கப்பட்ட யிந்த ஸ்தூல சரீரமாகவந்த யிம்மானிட ஜென்மங்களாகப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் இம்மை-மறுமை என்னும் இரண்டையும் வகுத்து அவரவருக் கேற்பட்டவாறு அமைத்த விதிப்பயனை அவரவர்தாமே அனுபவித்தல்வேண்டும். அதைவிடுத்து நாம் வீணில் அல்லல்படுதல் ஞாயமாகுமாதுரையே? முற்பவத்திற் செய்த வினையை பிற்பவத்திற்றான் அடையவேண்டியதென் பதை தாங்க ளறியவில்லையா நாதா.

## மித்ருராவ் பாட்டு ஷை மெட்டு

காதலியே என்னருமைக்கண்ணே கமலக்
கண்ணனைப்பணியும் வண்ணப்பெண்ணே
மாதுஎன்னன்னைபுரியும் மாயம் தன்னை
மறைத்தருளுங் க்ருஷ்ண சகாயம் (காத)

வ-ம்:—மாதர்களுக் கெல்லாஞ் சிலாக்கியமான மாணிக்க திலகமே! மறலி வந்தணுகுங்காலை திரங்குன்றியோடு மிக்காயத்தினது கூடுமாத்திர மிங்கிருக்கலாகுமே தவிற, அதனுடன் ஒருங்கு சேர்ந்து செயற்கரிதான காரியங்களை யெல்லாம் செய்ததை மறந்து செல்லும் ஆவியை சிலாக்கியமென வெண்ணிநாடியிருக்கும் பிணங்களெல்லாஞ் செய்யும் அட்டூழியங்களை எண்ணி யெண்ணி என்மனங் குண்ணி புண்ணுகின்றதே காதலி? உன்னைக்காணுந்தோறும் என்னுடைய மனம் ஆலைவாய்ப்பட்ட கரும்பதுபோல் அவஸ்தையுறுகின்றது "அவனன்றி யோரணுவும் அசையாது" என்பதை நம்பியிருப்பாய் எல்லாஞ் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்துபோகு மென்பதுதிண்ணம் இனியுன் கவலையை விட்டொழிப்பாய். வா போகலாம். [போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—5. இடம்—சரோஜனி விடுதி.

நடிகர்:—சரோஜனி, சக்குபாய், மித்ருராவ், மூர்த்திராவ்.

[அரைத்தமாவை ஏந்தின பாத்திரத்து டன் சக்குபாய் வருகிருள். சரோ ஜினி மாவை எடுத்துப்பார்த்து]

சரோ. வ-ம்:—அடிசக்கு இப்படிதானுமாவு அரைத்தல் முடியா தென்று சொல்லிவிட்டால் நான் அரைத்துக் கொள்ளுகிறேன்.

சக். வ-ம்:—மாமி கோபிக்கவேண்டாம் அடியாளுக்குத் தெரிந்த வரை யறைத்தேன் குற்றமிருப்பின் தாங்கள் இன்னம் உத்தி ரவு செய்யும்படி செய்யக் காத்திருக்கின்றேன் தெரிவியுங்கள் மாமி.

சரோ. வ-ம்:—ஏண்டி அப்படியா மீறிப் பேசுகிருய். ஆணவம்பிடித்து அறிவற்றச் சிறுக்கி. ஏண்டி இப்படி செய்தாயென்று கேட் டால் எதிர்த்துப் பேசுகிருளே.

தர்க்கம்

(நமதுநாடகேளில் விளேவில்லாத என்ற மெட்டு)

கண்ணிகள்

சரோ. மாவரைக்கவகை யேயிலாததடி
மாடுபோன்ற சிறுக்கி
கூவிநின்றுஎதிர் பேசுருஎன்னடி
கோலஜால குலுக்கி (மா)

சக்கு. ஏதும்நானறிகி லேனேஇந்தவிதம்
யேசலாமோ மாமி
பாதுகாப்பதுமுன் பாரமாகுங் க்ருபை
பாலிப்பாயே மாமி (ஏது)

சரோ. எதிர்த்துப்பேசிமனங் கொதிக்கசெய்வதுனக்
கேற்குமோ சொல்வாயே
மதிப்பிலாதுமுனங் துடிக்கின்ருயே-அடி
மடமைகொண்ட நாயே (மப)

சக்கு. வார்த்தைமீறிடேன் கேட்கத்தவறிடேன்
வருத்தமேது மாமி
சீர்த்தியற்றதொரு வேலேசெய்யேன்கோபம்
செய்திடாதீர் மாமி (ஏது)

வ-ம்:—மாமி! தாங்களேன் இவ்விதங் கோபிக்கின்றீர்கள். தங்கள் வார்த்தையைமீறி நானொருக்காலும் பேசமாட்டேன், மாமி!

தாயுந் தந்தையுந் தாங்களேயன்றி, வேறெனக்காருண்டு. தாங்கள் சொல்கிறபடி நடக்கிறேன். கோபத்தைவிடுத்துக் குணத்தைப் பாராட்டுங்கள் மாமி.

[மித்ருராவ் வெளியேவந்து தன் தாய் சரோஜனியைப் பார்த்து]

மித்ரு. வ-ம்:—எனம்மா தாயே? தாங்கள் ஒருநாளாவது சந்துஷ்டியாக யிருக்கும்படி செய்யாது இவ்விதம் துன்புறுத்தி வந்தால் அக்கம் பக்கத்தி லுள்ளவர்கள் நம்மை ஏளனஞ் செய்ய மாட்டார்களா? என்னுடைய தங்கை (யமுனபாயை) இன்னொருவருக்குக் கொடுத்தால் அவர்கள் அவ்விதஞ் செய்தால் நம்முடைய மனம் என்ன பாடுபடும் என்பதைத் தாங்களறிவீர்களேயானல் இத்துஷ்ட காரியத்திலீடுபட மாட்டீர்கள் தாயே.

சரோ. வ-ம்:—எனடா தடிப்பயலே நீயா எனக்குப்புத்தி புகட்ட வந்தனை நாயே உம்; அடே தண்டபிண்டம் கொட்டிக்கொள்ளும் நிலைமையானது ஞாயமுறைக்கவும் ஆச்சா. நீங்களிருவரும் துரையும் துரைசானியுமாக நாற்காலியில் அமர்ந்துகொள்ளுங்கள் நான் பணிவிடை செய்கிறேன் அதுதானே.

சக். வ-ம்:—மாமி தாங்கள் அவ்விதஞ் சொல்லாதீர்கள் நான் தங்களடிமையல்லவா! அடியாளாகிய நான் தங்கள் சித்தப் படியாவுஞ் செய்யச் சித்தமுடன் காத்திருக்கிறேன் தாங்கள் இன்னமும் மனமுவந்து என்னை என்ன செய்தபோதிலும் ஆனந்தமாக யேற்றுக் கொள்ளத்தடையில்லை.

சரோ. வ-ம்:—இந்தச் சிறுக்கியும் சமயம் பார்த்தல்லவோ நம்மை மயக்கித்தன் வசமாக்கக் கருதுகின்ருள் உம், நானு அதற்கீடு படுபவள்.

மித்ரு. வ-ம்:—அம்மணி இதைவிட இன்னமும் தங்களை என்ன கேட்பது தாயே.

## சரோஜனி பாட்டு

(சுற்றிக்கட்டும்வலையை என்ற மெட்டு)

போடாபோடா மடையா—நீ
புகலுவதும் விடையா
போக்கிரியேயுனை தாக்கிடுவேனிது
புத்தியற்ற வெறியா (போ)

ஏடாகூடம் பேசி—எனை
எதிர்க்கலானய் தோஷி

ஏதுவுன்மாமனையாளுடன் கூடிநீ
யேகடா விஸ்வாசி (போ)

வ-ம்:—ஏண்டா மித்ரு? நான் தாயல்லவா உன்னை வளர்த்த கொடுமையாயிது. தலையிருக்க வாலாடுமா என்பதை நினையாது என்ன தைர்யமாக பேசவந்தாய் அவ்வளவு நெஞ்சழுத்தமாவுனக்கு துஷ்டப்பயலே.

[மித்ருவை அடிக்க ஓட்டமெடுத்தல் சக்குபாய் பரிதவித்தல்]

(பிள்ளையில்லாப்பாவி என்ற மெட்டு)

பல்லவி

மாமியிந்த வர்மமாகுமா
மக்கள்மேல் சும்மா (மாமி)

அநுபல்லவி

சாமிசாக்ஷியாகச் சொல்வேன்
தங்களாக்கினைபோற் செய்வேன்
ஆமவரையடிக்க லாகுமா
அந்யாயமாமா (மாமி)

சரணம்

புத்தியற்றவெனக்குப் புத்தி
போதிக்கவேண்டும் நீதாயே
சத்தியத்தைநான் தவறேனே
தர்மம் மீறேனே (மாமி)

வ-ம்:—மாமி! தங்களுக்கேனிவ்வித கோபம்வருகிறது. தாங்களேன் எம்மிருவர்மீது இவ்வித மனஸ்தாபங்கொள்கிறீர்கள். தங்கள் குழந்தைவேறு, நான் வேருகப் பாவிப்பது தங்களுக்குத் தருமமல்லவே. மாமி! மாமி!! என்னை யாதரியும்; ஆட்கொள்ளும்; அடிமை என்மே லன்புவையும்.

[அழுதுகொண்டே சரோஜனியின் காலில் விழுந்து பணிகிருள். திடீரென சரோஜனி புருஷன் மூர்த்திராவ் வருகிருர்]

மூர்த்- வ-ம்:—(மூர்த்திராவ் வெளிவந்து சக்குபாயின் செயலைக்கண்டு சரோஜினியைப்பார்த்து) அடி பாபிஷ்டி! கொடும்பாபி! சதிகாரி இதென்னடியிது இராப்பகலின்றி ஒயாது ஓரயல்வீட்டுப்பெண்ணை இவ்வித இம்சைக்குள்ளாக்கிருய். இதுவுன் மதமா? அன்றி

தெய்வசம்மதமா? அல்லது இச் செய்கை வுனக்கடுக்குமா. அக்கம்பக்கத்துவீட்டார்கள் இச் செய்கையைக்கண்டு நம்மை யேளன்ஞ் செய்வார்களே.

[சரோஜனி பிரம்மித்து நிற்கிருள். சக்குபாய் எழுந்து மூர்த்திராவைப் பணிந்து]

வ-ம்:—மாமா! மாமியை ஏன் கோபிக்கின்றீர்கள். எதுவோ நான் செய்த குற்றத்திற்காக என்னை தண்டித்து கண்டிக்கின்ருர்கள். இது எனக்கு நன்மையே தவிற தீமையல்லவே.

மூர். வ-ம்:—நன்மையாவது தீமையாவது; இந்தப் பழிகாரியை மனைவியாக மணர்ந்தேனே நான். என் மதியை யல்லவோ சொல்லவேண்டும்.

[தலையி லடித்துக்கொண்டு மூர்த்திராவ் ஒரு பக்கம் போகின்ருர். கோபக்குறியுடன் சக்குபாயைப் பார்த்துக்கொண்டு சரோ ஜனி ஒருபக்கம் போகின்ருள். சக்குபாய் எழுந்துநின்று]

## சக்குபாய் பாட்டு

(காதலனும்வரக்காணுத என்ற மெட்டு)

கண்ணிகள்

பண்டரிபுரப் பரமாத்ம னே என்னைப்
பாது காத்திட லாகாதா
அண்டினே ரையாளும் ஐயனே என்னரு
மாபத்தை தீர்க்க லாகாதா (பண்)

சங்குசக் ராதரத்தாமோ தரா என்மேல்
தானுனக் கேனிந்த வஞ்சம்
மங்கைலட்சுமி மருவுஞ்ச மேதா யிம்
மங்கையை யாட்கொள்வாய் கொஞ்சம் (பண்)

தாசரதிஎனும் பேர்கொண்டு பக்தரைத்
தற்காத் திடுந்தம்பி ரானே
தாசன்சங்கர லிங்கந்தமிழ்க் கே யருள்
தற்பர னேஎம்பி ரானே (பண்)

[போகிருள்]

(சீன் முடிவு)

சீன்—6. இடம்—வீடு.

நடிகர்:—சரோஜனி, யமுனாபாய், சக்குபாய்.

[சரோஜனி நாற்காலியி லமர்ந்திருக்க சக்கு பாய் ஒருபுறமாகத் தலைகுனிந்து நிற்கிறாள்]

சரோ. வ-ம்:—(சக்குபாயைப் பார்த்து) ஏன்டி அடி சக்கு! ரொட்டி சுட்டானதா? உன் மாமன் புசித்தானதா. மித்ரு எங்கடி போனான்.

சக்கு. வ-ம்:—மாமா பசியாறிவிட்டார். தங்கள் மகன் இன்னும் வர வில்லை. நாத்தியம்மாளும் சாப்பிட்டானது; தங்களை போசனத் திற் கழைத்துப்போகவே இங்கு வந்தேன்.

சரோ. வ-ம்:—அடி போடி! ஏண்டி வீணாகப் பசப்புகிறாய். என்னை யழைத்துப் போகவா இங்கு வந்தனை.

சக்கு. வ-ம்:—வாஸ்தவமாகத் தங்களை அழைத்துப்போகவே வந் தேன் மாமி.

சரோ. வ-ம்:—அதிருக்கட்டும் உன் வயிற்றில் கொட்டிக் கொண் டாயா இல்லையா?

சக்கு. வ-ம்:—மாமி! தாங்கள் புசிக்காமல் நான் சாப்பிடலாமா மாமி.

சரோ. வ-ம்:—நல்லது. (உள்ளே பார்த்து) குழந்தாய் யமுனாபாய் இங்கேவாடி என்கண்ணே நான்பெற்ற செல்வமே செல்வமென் றாலும் உனக்குத்தான் தகும் (சத்குணங்காட்டி) இதோ நிற் கிறதே மூதேவி அப்படியா என் பெண்ணிருக்கிறது பார்.

[யமுனாபாய் அம்மாவென்று ஓடி வரக் கட்டி முத்தமிடுதல்]

யமு. வ-ம்:—ஏனம்மா என்னையழைத்தீர்கள்.

சரோ. வ-ம்:—என்னருமைச் செல்வமே உள்ளே சென்று 2 இரண்டு குடத்தையும் எடுத்துக்கொண்டு வா.

யமு. வ-ம்:—இதோ கொண்டுவருகிறேன்

[யமுனா உட்சென்று குடம் கொண்டு வர, குடம் இரண்டையும் சக்குவி னிடம் கொடுத்து]

சரோ. வ-ம்:—அடி சக்கு நீ நமது கேணிக்குச்சென்று இந்ததொட்டி நிரைய ஜலம்திரட்டி கொட்டி நிறப்பவேண்டும் இல்லையேல் பிண்டத்திற்குத் திண்டாட்டந்தான் தெரியுமா.

சக். வ-ம்:—மாமி தங்களிஷ்டப்படியே செய்கிறேன் மாமி.

சரோ. வ-ம்—வந்துபார்ப்பேன் ஜாக்கிரதை.

[போகிருள்]

(சீன் முடிவு)

---

**சீன்—7.** **இடம்—கிணற்றங்கரை.**

**நடிகர்:—சக்குபாய், மித்துருராவ்**

[சக்குபாய் இடுப்பிலொரு குடம் கையிலொருகுட மெடுத்துக் கொண்டு வருகிருள்]

## சக்குபாய் பாட்டு

**(ரகுராமா சுகநாமா என்ற மெட்டு)**

பல்லவி

ரகுநாதா சுகவேதா—நின்
னடிமை எந்தனேப்பாது காக்கும் விநோதா (ரகு)

அநுபல்லவி

வெகுவிதமாயொளிர் விஜயப்ரக் யாதா
விதரணகுணவே தாந்தசங்கீதா (ரகு)

சரணம்

தசரதராஜகு மார சிங்காரா
தசவவதாரமெ டுத்தகெம்பீரா
பசனேசெய்என்முகம் பார்த்தருள் தாராய்
படிக்குஞ்சங்கரலிங்கந் துதிக்குமனமிறங்கும் (ரகு)

சக்கு. வ-ம்:—சர்வலோக சரண்யா! இன்னம் எவ்வளவு காலத்திற் கையா நானனுபவிக்குங் கஷ்டங்களிருக்கின்றது போதும் நான் படுங்கஷ்டம். உமது நாமாவளியைப் பூஜிக்கவும் நேரமில்லேயே மச்சாவதாரா! நரஸிம்ஹசொரூபா! பண்டரிபுரமேவும் பாண்டு ரங்கா! வேண்டுவோர்க் கின்பந்தரும் வைகுந்தவாசா! நான் ஆரு மற்ற வனுதையென்பதை யுணர்ந்தும், வஞ்சனே செய்தல் தகுமா. துளசிதரா! துங்கவிலாசா! நீதான் றுணே. இக் கேணியைக் காணும்பொழுதே என்னுடல் நடுக்கமுறுகின்ற தென்ருல் இவ் வாழத்தினின்றும் இத் தொட்டிநிறைய ஜல மெப்படி நிறப்புவேன் காருண்யமூர்த்தியே.

## சக்குபாய் பாட்டு

(அமாரநபி என்ற மெட்டு)

பல்லவி

கிணற்றைப்—பார்க்கபய மிகவாகுதென் செய்வேன்
ஆகுதென் செய்வேன் ஆரிடம் உய்வேன் (பா)

அநுபல்லவி

காத்துரக்ஷிப்பாய்மூலா காருண்யனேகோபலா
பூர்த்தமலரணியும் புண்யசீலா-புவி
போற்றும் உலோலா (பா)

ராதாமனோஹரனே நாடுஞ்ஜனாதரனே
பாதாரவிந்தந்தரும் பரந்தாமனே-கண்
பாராய் பெம்மானே (பா)

[ஜலமிழுத்தல் கைகால் நடுக்குதல்]

வ-ம்:—ஆ ஜெகன்னாதா! நான் முன்னாளில் என்னை அண்டினோர்களை சிதறவடித்தேனோ அன்னமென்று வந்தோர்களை பின்னமுறச் செய்தேனோ நாயகருடனிருந்த நங்கையர்களை பிரித்துவைத்தேனோ நானிலத்திலுள்ளோர்களின் உறவைக் குலைத்தேனோ ஊராரைப் பகைத்தேனோ மாமிமார்களை இம்சித்தேனோ அறிகிலேன். என்செய்வேன் பண்டரிநாதா! நான் உமதுமீதில் பழியைச் சுமத்துவதில் யாது பயன் உள. உம்;

"செய்தீவினை யிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ"

என்பதுபோல், இன்னாருக் கின்னபடியென்று முன்னாளில் இட்ட கட்டளையென்பதை நினைந்து வரவேண்டியதிருக்க, வீணே வருந்துவதில் ஞாயமுண்டோ· மேலும், அம்பை நோவதா அல்லது எய்தவினை நோவதா என்பதை நோக்கில், அம்பு என் செயும் அதை எய்தவனையல்லவோ நோதல் வேண்டும். அது போல் நம் கன்மவினை நம்மைச் சூழ்ந்து நிற்க, நாம் துக்கமுறல் நீதியோ; "அவரவர்வினையி லவரவர் வருவார்" என்பது பொய்க்குமா? ஒருக்காலும் பொய்க்காது. என் தேகமெல்லாம் ஓய்வடைகின்றன; கால்களுதறுகின்றன; கரங்கள் சிலிர்த்துப் போகின்றன; அடியெடுத்து வைக்கவோ நின்று சமாளிக்கவோ சக்தியென்பது கொஞ்சமுமில்லாது தத்தளிக்கின்றது; பரம்ம சொரூபராகிய பாண்டுரங்கனே! என் ஆவி என்னைவிட்டகலும்போ விருக்கின்ற தப்பனே நீதான் துணை.

## சக்குபாய் பாட்டு

(சிதம்பர தரிசனமா என்ற மெட்டு)

பல்லவி

பண்டரிபுரநாதா நீ என்னைப்
பாதுகாத்திட வாதா விநோதா (பண்)

அநுபல்லவி

விண்டுவெனவேதுதி விமலனேக்ருபாநிதி
தண்டுளவமார்பனே தாமோதரானந்தனே
தாராயோ வரந் தாராயோ ஐயா
தாசதாச ப்ரகாசா
ஈசனே சித்விலாசா (பண்)

சரணம்

கமலக்கண்ணா மணிவண்ணா எந்தனுக்குந்தன்
காக்ஷிதருவாய் சம்பன்னா—மன்னா (கம)

சமயதயாபரனே சர்வஜீவாதரனே
சமயமிதுவே வாராய் தவிக்குமெந்தனைக் காராய்
சங்கீதா ஞானத் தின்போதா—தமிழ்ச்
சங்கரலிங்கம் புகழ்த்
தங்குங் குஞ்சிதன்மகிழ்ப் (பண்)

[மூர்ச்சித்துக் கீழேவிழுகிறாள்
மித்ருராவ் வந்து பார்த்து]

மித்ரு. வ-ம்:—என்ன ஆச்சர்யமிது! நமது சக்குவைப்போலிருக்கின்றது என்ன கொடுமை; நம் தாய் செய்யுங் கொடுமையானது மகா கொடுமையாக யிருக்கின்றது ஐயோ தெய்வமே! தீன தயாளா! நீர் இப்படியுஞ் சோதிப்பதழகோ; என் மனதிற்குகந்த மின்னாள்! மாகுணம்படைத்த பொன்னாள்! மங்கையர் மெச்சும் இல்லாள்! கோரமான சவம்போல்கிடக்கின்றனள். இவ்வளவிற்கெல்லாம் காரணம் நானல்லவா; என்னைச் சுட்டெரிக்கினும் தகும். நான், "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்னுந் திவ்யபோதனைமுறையைக் கைக்கொண்டதினாலல்லவோ என் காதலிக்கு இத்தகைய கஷ்டங்களெல்லாம் நேர்ந்தது உம்; இனி காலங்கடத்தலாகாது. நமது அறையில் தூக்கிக் கொண்டுபோய் நனைந்த வுடைகளைக் களைந்தெறிந்து, வேறு உடை தரித்து தகுந்த சிகிச்சை செய்வோம்.

[விழுந்து கிடக்குஞ் சக்குபா
யருகிற் சென்று]

## பாட்டு

(ஜனம்காஞர தேக்காஹே என்ற மெட்டு)

என்னநான்செய்குவேன் நாதா எனக்கார்துணைசொல்நீதா
முன்னம்நான்செய்வினை யீதா முகுந்தாகாரும் வைகுந்தா (எ)

வேணுகியான கோபாலா வேதாந்தம்போற்றும் நற்சீலா
காணும்காக்ஷிதரும் லோலா கமலக்கண்ணனே மூலா (எ)

சஞ்சிதபாவத்தைத் தீராய் சாற்றுமென்முறையை கேளாய்க்
குஞ்சிதபாதத்தை யாளாய் கோவிந்தானந்தபொற்றுளா (எ)

மித்ரு. வ-ம்:—காலங்கடத்தாது ஆகவேண்டியவைகளைச் செய்வோம்.

[மித்துருராவ் சக்குபாயை தூக்கிக் கொண்டு போதல்]

(சீன் முடிவு)

---

**சீன்—8. இடம்—படுக்கையரை.**

நடிகர்:—மித்ருராவ் சக்குபாய், சரோஜினிபாய்

[சக்குபாய் சயனத்தில் படுத்திருக்க மிதருராவ் தைலமெடுத்துத் தடவுதல்]

[உடன் சரோஜினி வரக்கண்ட மித்ருராவ் தைலத்தைத் தன் தலையில் தடவிக்கொண்டு]

மித்ரு. வ-ம்:—ஐயோ அம்மா! அப்பா! தலையை வலிக்கின்றதே என்ன செய்யப் போகின்றேன்; அடாடா தாங்கமுடியவில்லையே; ஆஹா ஊஹூ டேயப்பா என்னபாடு படுத்துகின்றது உம்;

சரோ. வ-ம்:—(தனியாக) என்ன பாசாங்கு என்ன ஜாலம் எங்கு கற்றான். நல்லவேலையடா யிது; நான்மறைந்தால் அவளுக்கு மருந்து போடுகின்றான். நம்மைக்கண்டதும் தான் தடவிக் கொள்ளுகின்றான். இருக்கட்டும் இன்னும் பார்ப்போம். (மறைதல்)

மித்ரு. வ-ம்:—ஆ கண்மணி! இன்னமும் உன் நினைவு உனக்கு வரவில்லையே. ஒரு நிமிடமும் நானிவ்விதம் உன்னுடன் இருக்க

வில்லையே. அவ்விதமிருந்தால் உனது சந்தோஷத்தைக் கேட்கவும் வேண்டுமோ; (உடன் அங்கு சரோஜனிவர) அப்பா! அம்மா! தலைநோகின்றதே கண் எரிகின்றதே என் செய்வேன்.

சரோ. வ-ம்:—என்னடா மித்ரு இங்கே வா; உனக்குந் தலைவலியா? உம்; ஏனடாயிந்த பாசாங்கு,

## சரோஜனி பாட்டு

(சிங்காரதீரனே என்ற மெட்டு)

கண்ணிகள்

பாசாங்குயேனடா பசப்பறிவேனடா
வேஷம்பொல்லாதடா விலகிநிற்பாயடா (பாசா)

உனக்கொருதலைவலி வுண்டாச்சுதோகிலி
மனக்குறைவாமொலி மாருட்டப்பேய்புலி (பாசா)

பெண்டாட்டிநேசமா பெற்றோர்கள்மோசமா
உண்டானகெர்வமா வுனக்கிந்தவர்மமா (பாசா)

வ-ம்:—எப்போது இந்த வேடம் கற்றுக்கொண்டாய் பயலே.

[மித்துருவை அடிக்கின்றாள் அவர் அழுது கொண்டே ஓடுகின்றார். சரோஜனி சக்கு பாயைப் பார்த்து]

வ-ம்:—அடியே சக்கு! உனக்கென்னடி கேடுவந்து சம்பவித்தது; குண்டுக்கல்போலிருக்கும் உனக்கு ஒரு திண்டு தலைகாணையா கேட்கின்றது. இந்த துடைகாலி சிறுக்கி வந்ததுமுதல் என் குடியே கெட்டுப்போச்சு. இந்தச் சிறுக்கியை தொட்டி நிறைய தண்ணீர் நிறப்பும்படி கூறியிருக்க அதை விடுத்து சப்ரமஞ்சத்தில் சயனித்துக்கொண்டாளே உம்; எல்லாமந்த தடிப்பயல் கொடுக்கும் சலுகையல்லவா. இருக்கட்டும் என் கைவரிசையை இனிதான் காண்பிக்கவேண்டும்; இதுவரை செய்ததெல்லாம் நன்மைக்காக செய்தேன். ஆ! அப்படியா சமாச்சாரம்.

## சரோஜனி பாட்டு

(சரிசரி சாமுத்ரிகாலக்ஷணம் என்ற மெட்டு)

பல்லவி

சரிசரி சக்குபாயின் பாசாங்கு (சரி)

அநுபல்லவி

தெரியாதவள் போலேவெகு
சிலுப்பாகவே பலுக்குஞ்சங்கதி (சரி)

சரணம்

உரியகணவன் றனையழைத்து ஓதுராள்பலமந்திரம்
உற்றவேலை செய்யச்சொன்னால் உதித்திடுமிவள் தந்திரம்

உரியநீலியே இவள் பெரியகாளியே
ஓதுஞ்செய லேதுந்தெரி
யாதும்பல சூதுசெய்பவள் (சரி)

வ-ம்:—சரி சரி; நாம் வந்துநிற்பதையுங் கவனியாதவள்போ லல்லவோ பாசாங்கு செய்கிறாள். அடியே சக்கு! (அறை கொடுத்து) எழுந்திரடி மூதேவி.

சக்கு. வ-ம்:—(திடுக்குற்று எழுந்து தனியாக) ஆகா நாமெப்படி யிங்குவந்தோம். ஜலம் நிறப்பும்பொழுது கால்வழுக்கி நம்மைக் கீழ் விழும்படிச் செய்தது ஒன்றே நினைவிலிருக்கிறது மற்றவை நினைவில்லை. அந்தோ என் செய்வேன் சமீபத்தில் மாமி நிற்கின்றார்களே நான்செய்த அபசாரத்திற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்.

[சக்குபாய் எழுந்து சரோ
ஜனி காலில் விழுந்து]

## சக்குபாய் பாட்டு

(பாராய் பரந்தாமனே என்ற மெட்டு)

பல்லவி

பாதம்பணிந்தேன்மாமி பாதுகார்நேமி (பா)

அநுபல்லவி

ஆதரிப்பாஎன்னை ஆகும்நீயேஅன்னை
ஏதுமறியேன்முன்னே இங்கேவந்ததுமென்ன (பா)

சரணம்

சிறியாளேனைமன்னித்து செய்தபிழைபொறுத்து
அரிதாளனைமதித்து அபயந்தாராய்க்ஷமித்து (பா)

கேணிக்கரையில்நானே கீழேவிழுந்திட்டேனே
தானிங்குவந்தசெய்தி தானேயறிகிலேனே (பா)

வ-ம்:—மாமி என்னை மன்னித்தருளல் வேண்டும் மாமி தங்களுத்திரவு பிரகாரம் அக்கேணியில் ஜலம் இழுத்துக்கொண்டிருக்கும்போது ஆங்குள்ள பாசல் வழுக்கிகீழே வீழ்ந்து மூர்ச்சையானேன் இப்போது விழித்துப்பார்க்க இங்கிருக்கின்றேன் மற்றவைகள் தெரியாது அடியாளை க்ஷமித்தருளல் வேண்டும்.

சரோ. வ-ம்:—ஆ! அப்படியா, பேஷ் நன்ருயிருக்கின்றது, என்ன கூறிணுய் பாசலாவழுக்கி விழுந்து விட்டாய் என்ன சாமார்த்தியமான பதில் எங்கேயடிகற்ருய் மாப்பிள்ளேயை மயக்கி இங்கழைத்துக்கொண்டு வந்திருந்ததை மறைக்க நல்ல ஜாலவித்தை பதிலடியிது.

சக்· வ-ம்:—மாமி அவ்விதமான செய்கைகளொன்றுமில்லே மாமியம்மா உண்மையாகச் சொல்லுகிறேன் நான் அவ்விதம் விழுந்திருந்தசமயம் என்பர்த்தா ஒருக்கால் கண்டென்னேத் தூக்கிக் கொண்டுவந்து இவண் கிடத்தினர்போலும் நான் ஒரு பாவமும் அறியாதவள் நான் எதற்காகப் பொய்பேசல்வேண்டும் "நல்லதைநாடல் நன்மையதாமே" என்பதை நான் அறிந்தவளல்லவா மாமி? தாங்கள் உத்திரவு செய்யும் பிரகாரம் அடியாள் செய்யக் கார்த்துக் கொண்டிருக்கிறேன் தெரிவியுங்கள்

சரோ. வ-ம்:—அடியம்மாடி! என்ன வேதாந்தம் பேசுகின்ருள் இருக்கட்டும் உள்ளேபார்த்து யமுனுபாய்? பழைய சீலேயும் செப்புக் குடத்தையும் எடுத்துக்கொண்டு வருவாய்

[உள்ளிருந்தபடி]

யமு. வ-ம்:—அம்மா! இதோ கொண்டுவருகின்றேன்.

[யமுனுபாய் வெளிவந்து சேலே குடம் கொண்டுவந்து வைத்தல்]

சரோ. வ-ம்:—சக்குபாய் இதை எடுத்துக்கொண்டு சந்திரபாகா நதிக்குப்போய் சேலேயைசுத்தமாக துவைத்தும் இந்தக்குடம் நிறைய ஜலமுங்கொண்டு அதிவிரைவில் வரவேண்டும்

யமு. வ-ம்:—சக்கு? போனேம் வந்தோம் என்று சொல்லும்படி வந்து சேரவேண்டும்

சக். வ-ம்:—மாமி நாத்தி நான் அங்கு என்ன செய்யப்போகின்றேன் என்வேலே முடிந்தவுடனே வந்துவிடுகிறேன்.

சரோ. வ-ம்:—சக்கு அங்கு போகும்போது அன்னியர்களுடன் உறவு ஆகாது சர்வ சாக்கிரதையாகவந்து சேரவேண்டும் ஞாபகமிருக்கட்டும்.

சக். வ-ம்:—நல்லது மாமி நான் என் பிறருடன் சேரவேண்டும் உலகவியல்பு இன்னதென உணராதவர்கள் அன்ருே பெரியோர்கள் சொல்லே மீறி நடப்பார்கள் நான் ஒருக்காலுந் தங்களது கட்டளேயை மீறி நடக்கமாட்டேன் என்பதை அறிந்தவர்களல்லவா உத்திரவு கொடுங்கள்.

சரோ. வ-ம்:—சரி சென்றுவா.

[எல்லோரும் பிரிதல்]

சீன் முடிவு.

---

சீன்—9. இடம்—வீதி.

நடிகர்:—ஞானபாய், மீனபாய் சக்குபாய்.

[ஞானுபாய் மீனுபாய் இருவரும் கையில் குடத்துடன் நதிக்குச்செல்கின்றனர்]

பாட்டு தர்க்கம்

(போகலாம் வாராய் என்ற மெட்டு)

மீனு. ஞானுபாய் வாராய் நதிக்கரைசெல்லுவோம் சீராய் (ஞா)
ஆனதோர் வீட்டினில் ஆனவேலை தன்னை
நானே முடித்திட்டேன் (ஞா

வ-ம்:—அடியே, ஞானு, என்னுத்து வேலையெல்லாம் முடிந்தது. என் மாமா மாமி கொழுநர் நாத்தி என் கணவர் போசனஞ்செய்வதற்குள் நதிக்குச்சென்று நல்ல ஜலங்கொண்டுவர வேண்டும். சீக்கிரம் நடந்து வாடியம்மா.

(பாட்டு ஷை மெட்டு)

ஞானு. சரிசரிமீனு தடையில்லாமலே செல்வோம் நாம் (சரி)
உரியதோர்நதிதனில் ஓடிக்குளித்து நாம்
ஆடி வருகுவோம் (சரி)

வ-ம்:—தோழி! மீனுபாய் உன்னுடன் நதிக்கரைக்குவர எனக்கு அத்யந்தப்பிரியம் என் வீட்டில் வேறுயாருக்கின்றார்கள். நானென்று என் புருஷனென்று அவர் தினமும் உத்தியோகத்திலிருந்து வரும்போது நேரே காலக்ஷேபத்திற்குப்போய், ஸ்ரீ பண்டரி நாதனின் பக்தர்களின் சரிதையைக்கேட்டுவிட்டு இரவு 8 மணிக்குத்தான் வீட்டுக்கு வருவார் அதற்குள்ளாக நான் சகல வேலையையும் முடித்துவைத்திருப்பது வழக்கம்.

(பாட்டு ஷை மெட்டு)

மீனு. எனது புருஷரே இருக்குமிடந் தெரியாதவரே (என)
மனமகிழ்ந்தெனதுடன் மருவிடுஞ்சல்லாபநேசரே (என

வ-ம்:—என் வீட்டில், மாமனர், கொழுநர், மைத்துனிமார், இவர்களின் வேலைகளை என்மாமியே பார்த்துக்கொள்வார்கள். அந்த

வகையில் எனக்கொரு கஷ்டமுமில்லை. என்மன்னவரும் என் மனப்படி சந்தோஷமாகவே இருப்பார்.

(பாட்டு ஷை மெட்டு)

ஞாு. நேரமானது நேசியேவிரைவிற்செல்வோம் (நே)
பாரடி எதிர்சக்கு பாபாயும் நம்மைத்தேடிவாராள் (நே)

வ-ம்:—மீனுபாய் பேசிக்கொண்டே யிருப்போமாகில், பொழுது போகாமலிருக்குமா சீக்கிரம் போவோம்வாடி. (எதிர்ப்பார்த்து) அடிமீனு அதோ எதிரேபார் நமது நேசி சக்குபாய் கையில் செப்புக்குடமும், நனைந்த சேலை ஒன்றையும் எடுத்துக்கொண்டு வருகிறுள்.

[மீனுபாய் ஞானுபாய் இருவரும் எதிர்ப்பார்த்துநிற்க சக்குபாய் பாடிக்கொண்டே வருகிறுள்]

## சக்குபாய் பாட்டு

(துமபின மோரி என்ற மெட்டு)

பெண்ஜென்மமெடுத்துநான் படுந்துயர்போதும்
பெருமானே என்னுல் பேசத்தகாது(பெண்)
மூன்செய்தவினையே மூண்டதோவறியேன்
மூலாதரனே கோபால சுசீலா
இன்னமென்செய்வேன் எவ்விடமுய்வேன்
எந்தையேநந்த கோவிந்தலோலா(பெண்)

வ-ம்:—இருந்தாலும் என்னைப் போல் துர்ப்பாக்கிய நிலைமையையுடைய பெண்பிள்ளைகள் உலகில் இருக்கமாட்டார்கள். என் நான் இச்செனமமெடுத்தது "ஊழ்வினையின்பலனே" தவிற வேறில்லை "தன்வினை தன்னைச்சுடும்" என்பது பொய்க்குமா ஒருக்காலும் பொய்க்காது இன்னம் எவ்வித துயரமேற்படினும் ஆண்டு அனுபவிப்போம் என்செய்வது எவரை நோவது "அவனருளற்ருல் அனைவருமற்ருர்" என்பது உலகோரறிந்த விஷயமல்லவா! மனமேபொறுப்பாய் மாசற்றவுள்ள முடையவரான பரமாத்மாவானவர் காப்பாற்றுவார். [வெளியே வந்ததும்]

மீனு. வ-ம்:—ஆ! சக்குபாய்? வாம்மா வா நின்போன்ற மஹாபாபிகள் உலகிலொருவருமிலர் ஏனம்மா, உன்மாமியினிடம் நீபடும் பாடு எங்களுக்கு வயிற்றெரிச்சலை உண்டாக்குவதுடன் அவளை (சரோஜனியை) டார் டாராகக் கிழித்தெரியலாமென்ற யெண்ணம் உண்டாகின்றது. என் மாமியாயிருந்தால் பேசவும் வேண்டுமா உம்;

ஞா. வ-ம்:—அடிபோடி பைத்தியக்காரி நானுயிருந்தால் பிண்டத்திற்கு திண்டாட்டமுண்டாக்கி மண்டையைப் பிளந்து தொண்டையைப் பிடித்து எமபுரஞ்சேர்த்து விடுவேன் இம்மாது (சக்குபாய்) சிரோன்மணி உத்தமகுணம் வாய்ந்தவளானதினுல் வந்ததை நொந்தனுபவிக்கின்றனள்.

சக். வ-ம்:—சகோதரிகளே? நீங்கள் பாஷிப்பதும் தூஷிப்பதும் கேவலம் மிருகவகைகள் கூட சம்மதிக்க ஞாயமில்லையென்றால் பகுத்தறிவைப்படைத்த மக்கள் எவ்விதஞ் சகிப்பார்கள். இனி இத்தகைய துற்கிருத்தியமான வார்த்தைகளை உபயோகிப்பது மஹாகொடிய ரௌரவாதி நரகத்தில் கொண்டுவிடும் என்பதையறிவீர்கள். சாக்ஷாத் லோகனுயகராகிய பண்டரிபுரத்தையனை பூசிப்பதில் காலத்தைக்கடத்துங்கள் நன்மார்க்கமடையலாம் என்மாமி எனக்கிட்ட கட்டளைகளை நிறைவேற்றுவதொன்றே எனக்கு மேலானபதவிகிட்டும் என்பதைத் திண்ணமாக நம்பியிருக்கிறேன் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பதையும் உணர்வீர்கள்.

ஞா. வ-ம்:—அதுவும் ஞாயமே சீக்கிரம் புறப்படுங்கள் வந்துவெகு நேரமாகின்றது.

மீ. வ-ம்:—நான் முன்னமே சொல்லலாமென்றிருந்தேன் நீயுஞ் சொல்லிவிட்டாய் புறப்படுங்கள்.

## மூவருஞ் சேர்ந்து பாடல்

(பாலாபிஷேக தூற என்ற மெட்டு)

பல்லவி

நாமொன்ருய்க் கூடிப்பாடி யேகுவோங்கொண்டாடியே (நா)

அநுபல்லவி

தாமதஞ்செய்யாமல் சந்த்ர பாகா நதிக்ரீடையாடி
வாமனசம்ஹாரரூப வண்ணனை நாம் பாடுவோமே (நா)

[மூவரும் போதல்]

(சீன் முடிவு.)

---

சீன்—10. இடம்—நதிக்கரை.

நடிகர்:—மீனுபாய் ஞானுபாய் சக்குபாய் (பிராமண விதவை) காமம்மால்

[பிராமணஸ்திரி விதவை காமம்மாள் ஓர் சிறு செம்பைக்கையேந்திய வண்ணம் வெளிவந்து]

காம. வ-ம்:—நான் பெண்ணாய்ப் பிறந்ததுமுதல் இதுவரை என்ன சுகத்தைத்தைக் கண்டேன் வயிறாரப்புசித்தேனா? அல்லதுமன மகிழ சர்வாபரண ஆடையாலங்கிரதஞ் செய்து களித்தேனா. அன்றி ,ஆசைதீர மாலே சூடிய மன்னவருடன் கூடி வாழ்ந் தேனா? ஒன்றுமில்லை.

செல்வச்சம்ப்ரதாயத்துடன் சிறுவயதில் மணமியற்றினார்கள் என் தலைவிதி. சிறுவயதிலேயே அமங்கலியானேன் புருஷன் பூஸ்தி தியைப் பங்காளிகள் கைப்பற்றிக்கொண்டனர் என்தாய்வீடு தமை யன் வீடு தகப்பன் வீடு முதலிய சகலமும் தரை மட்டமாய்விட்டது வயிற்றுப் பிழைப்புக் கன் செய்வது திருட்டுத்தொழிலேயே ஜீவன மாகக் கொண்டு காலங்கடத்தி வருகிறேன் நேற்றிரவு சாப்பிட்டது. இன்று பொழுது போகும் இதுவரை போசனங்கிடைக்கவில்லை. நதிக்கரைக்கு வந்தநேரம் உத்தமியான சக்குபாய் தெரிசனங்கிடைத் தது. எவ்விதத்தும் அவளது குடத்தைத்திருடிச் செல்வதே நமது புண்யபலனாகும். (யோசித்து) ஆம் இதுவே சரியானயோசனை.

[மறைவிடமாகப் போகின்றாள்.
ஞானபாய் மீனபாய் சக்குபாய்
மூவரும் நதிக்கு வந்து குளித்
து ஜலமெடுத்துப்போதல்.]

சக். வ-ம்.—(ஞானமீனபாயைப் பார்த்து) சகோதரிகளே, நீங்கள் விரைவிற் செல்லுங்கள் நானிந்த சேலையைத் துவைத்தெடுத் துக்கொண்டு வருகிறேன் எனக்காக நீங்கள் காத்திருந்து வீட் டிற்குச் சென்று கஷ்டப்படவேண்டாம்.

ஞான. வ-ம்:—வாஸ்தவந்தான் சக்குசொல்வதுஞ் சரிதான். அடியே மீன வாடி நாம் போகலாம்.

மீன. வ-ம்:—அம்மா, சக்குபாய், நாங்கள்போகிறோம். பொழுதுசாயு முன்புடவையைத் துவைத்தெடுத்துக் கொண்டு விரைவில் வந்து விடு.

சக். வ-ம்:—ஆகட்டும் நீங்கள் செல்லுங்கள்

[ஞானபாய் மீனபாய் இருவரும்
போகசக்குபாய் நதிக்கரையில்
நின்று சேலைதுவைக்கிறாள்]

## சக்குபாய் பாட்டு.

(சாமி சோமசேகரனருளும் என்ற மெட்டு)

கண்ணிகள்

நான்-ஏனோ எடுத்தேனிந்த ஜென்மம் ஜென்மம்
இன்னும்-ஏனோ என் மீதிலிந்த வன்மம் வன்மம்

வினை-தானே விளைந்ததிந்த கன்மம் கன்மம்
என்னல்-சகிக்கமுடி யாதுஇந்த துன்பம் துன்பம் (ஏனோ)

[சேலையைச் சிறிது துவைத்துக் கஷ்டத்தால் தியங்கிநின்று]

(பாட்டு ஷடி மெட்டு)

மச்சாவ தாரமான மாயா மாயா—என்
மனத்துயர் விலக்கியருள் தூயா தூயா—நற்
பச்சைமேனி யோனேசெவ் வாயா வாயா—எனைப்
பாதுகாத் தருள்செய்ச காயா நேயா (என)

[சேலையைத் துவைத்துத் தோளில்போட்டுக்கொண்டு இடுப்பில் ஜலத்தை எடுத்துக்கொண்டு போகிறாள்]

(சீன் முடிவு.)

---

## சீன்—11. இடம்—ஓர்வீதியில் பஜனைமடம்.

நடிகர்:—பரமாத்மபாகவதர், பஜனைக்கோஷ்டிகள், சக்குபாய், காமம்மாள்.

[பாகவதர் நின்றிருக்க பக்தர்கள் அமர்ந்திருக்க கிருஷ்ண விக்ரகத்திற்கு பூசை நடக்கின்றது எல்லோரும் நமஸ்கரிக்கின்றனர். அவ்வீதி வழியாக வந்த சக்குபாய் இவற்றைக் கண்ணுற்று இடுப்பிலுள்ள குடத்தையும் தோளிலுள்ள சேலையையும் கீழே வைத்துவிட்டுத் தன்னை மறந்து நிற்கின்றாள்.

பர-பாக-வ-ம்:—சர்வத்ர கோவிந்தநாம சங்கீர்த்தனம்

சகலரும்:—கோவிந்தா. கோவிந்தா.

### பாகவதர் பாட்டு

ஜல-பண்டரீலஜாவும் ரக்மதேவிபாகும் (பண்)

டோளோநீவ தீலாரஜ
மாஜதேத்தோ ஸாமாதனச்சல (பண்)

சந்தமகந்தாச்சே ஓதிலபேட்டி
ஆனந்தநாத்தோ வாளோவண்டிச்சல (பண்)

வ-ம்:—சபையோர்களே? நாம் இன்று யிங்குகூடியிருப்பது எதற்காக வெனிலோ சர்வலோக சரண்யனும் சாது சங்க சுதர்ஸன சாக்ஷாத்யெம்பெருமானுன ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்ய குணகுணங்களை நாம் எளிதிலுணர்ந்து பேரின்ப வெள்ளமாகிய மோக்ஷவீட்டையடைய ஏதுதுவாகிய நமது மனத்தைப் பரிசுத்தமாக்கிக் கொள்ள வேண்டியதற்காகவே நாம் இங்கு கூடினோம் இனி ஒவ்வொருவரும் அதிகாலையிலெழுந்து ஸ்நான ஜபதங்களைச் செவ்வனே செய்து சுத்த சாட்குண்ணியனுன பரமாத்மாவினது திவ்விய காரூர விந்தங்களைத்தொழுது பந்த பாச மெனுங் கட்டைநீக்கி வாழவேண்டியது நமது கடமையாகும் ஹரிவிட்டலே ஹரிவிட்டலே

சகலரும்:—ஹரிவிட்டலே. ஹரிவிட்டலே.

[இதுசமயம் பிராமண விதவை காமம்மாள் வருகின்ருள்]

வ-ம்:—நான் இன்று நரிமுகத்தில் விழித்தபோதே ஏதாவது பிறரால் சன்மானமடைவோ மென்பது தெரியும் தெரிந்தாலும் பிறர் நேரே கொடுக்காவிடினும் நாமாவது அபகரித்தாலும் அதுவும் மேற்சொன்ன சன்மானத்தைப்போல் நாம் எண்ணிக்கொள்ள வேண்டியதுதான் இதோ சக்குபாய் சேலை குடம் இரண்டையும்வைத்துவிட்டு அதோ நடைபெறும் பஜனைமடத்தில் பக்தியிலீடுபட்டு அமர்ந்து விட்டாள் அவள் மாமி சரோஜனி மகா கொடுமைவாய்ந்தவள் மனமாற ஒருவருக்கு ஒன்றுங் கொடுத்துதவ மனமிசையாதவள் ஆதலால், நாமிதை யபகரித்துப்போக வேண்டியதுதான் நம்முடைய வேலை.

[சுற்றுமுற்றும் பார்த்து சேலை, குடம் இரண்டையும் எடுத்துக்கொண்டு]

## காமம்மாள் பாட்டு

(இருப்பு சங்கிலி தோறட்டு-என்ற மெட்டு)

விழித்தமுகத்தின்சுக மடைந்தேனிக்காலே
வந்ததாலே நல்ல சேலை-கண்
டெடுத்ததைநானனுப வித்திட மேலே
சொந்தம் போலே (விழி)

வைத்தவள்போலிங்கு எடுத்தேனிந்தக்குடத்தை
பொல்லாநடத்தை மடத்தனத்தை-எண்ணி
வருந்துவதினல்பலனென்று மில்லாவிதத்தை
சொன்ன லவஸ்த்தை (வி)

வ-ம்:—இதே விதமாகத் தினங்கிடைத்தாலும் நம்முடைய யோகமே பேஷான யோகம். அதிலும் விசேஷமாக பெண்களின் மானத்தைக் காப்பாற்றுவது சேலையல்லவா! நமக்கும் அவசியம் எது தேவையோ அதே விதமாக சேலையுங் கிடைத்தது அது மாத்திரமா செப்புக்குடமுஞ் சேர்ந்து கிடைத்தது. ஆயினும்; இது திருட்டுச் சொத்தென்பதுடன் நாம் திருடியென்னும் பேரும் வந்தது. பிறர் திருடியென்று சொன்னார்களா? இல்லை இல்லை; நாம் செய்யுங்காரியமே நம்மை இடைவிடாது ஒவ்வொரு சமயத்திலும் தூண்டிக்கொண்டே யிருக்குமாதலால் நாம் எவ்வகையிலும் மறைக்கமுடியாது. இந்தக் காரியஞ்செய்யக்கூடாது நாம் செய்துவிட்டோம் இனி யிங்கிருந்தால் எவராவது கண்டு கொள்வார்கள் கண்டு கொண்டால் ஆபத்தேற்படும் நாம் நமதில்லஞ் சேர்வோம். (போகிறாள்)

சக்கு. வ-ம்:—ஹரி! நமோ நாராயணா? காளிங்க நர்த்தனா, கருணாகரனந்தனா, வசுதேவ வம்ஸவர்த்தனா, கோபிகாவஸ்திர பஹரணா, கோக்கள் சம்ரக்ஷணா, கோவர்த்தனகிரிதாரணா, கோதையாள்மீது காருண்யங் காட்டலாகாதா நான் எந்த வஸ்துவின் பேரிலும் இச்சைக்கொள்ளேன் உமது பாததூளிகையினதுஸ்பரிஸம் பட்டாலும் போதும்.

> "இக்காயம் நீக்கியினி யொரு காயத்திற்
> புக்கிப் பிறவாவழி தேடுமின்" (குறள்)

என்னும் ஆன்றோர் வாக்கைச் சான்றாக மேற்கொண்டுள்ளேனாதலினால் அடியாளை ஆட்கொண்டருளும் சங்கு சக்ராபரணதயாநிதியே.

## சக்குபாய் பாட்டு

(அநுமந்தா அநுமந்தா என்ற மெட்டு)

கண்ணிகள்

ரகுராமா ரகுராமா
நமோநமோபரந் தாமாஜெயஜெய (ரகு)

மகிபுகழ்சோமா மாபலபீமா
மாரீஸராக்ஷஸர்க் கேமாஜெயஜெய (ரகு)

தசரதன்மகனே ஜானகிசுகனே
தாரகமந்ரா தரனேஜெயஜெய (ரகு)

சாமளதேகா சகலவைபோகா
சங்கரலிங்கந்தமிழ்த் தியாகாஜெயஜெய (ரகு)

(சீன் முடிவு)

சீன்—12. இடம்:—சரோஜினி வீடு

நடிகர்—சரோஜினிபாய், மித்ருராவ், யமுனாபாய்.

[சரோஜினி நாற்காலியிலமர்ந்திருக்க மித்ருராவ் வருகிறார்.]

சரோ. வ-ம்:—சந்திரபாகா நதிக்குச்சென்ற சக்குபாயைக் காணுமடா, இன்னமும் என்ன செய்கிறாள். நான் ஏதாவது கண்டித்தால் உனக்குக் கோபம் வந்து விடுகின்றதே இப்படிச் செய்பவளை என்ன செய்யலாம்.

மித். வ-ம்:—தாயே! நீர் ஏனம்மா இவ்வித கஷ்டமடைகின்றீர் அவள் போனால் போகட்டுமே சனி துலைந்தது இனியவளைப் பற்றி நினைக்க வேண்டாம்.

சரோ. வ-ம்:—ஏண்டா! இதற்குத்தானா உன்னிடம் தெரிவித்தேன் அவள் நமது வீட்டிற்கு யோக்யமில்லை யென்று ஆதியில் சொன்னேனே என் வார்த்தையை யார் கேட்டார்கள்.

மித். வ-ம்:—போனது போகட்டும் அவள் வார்த்தையை என் செவியில் விழுமாறு செய்யவேண்டாம்.

சரோ. வ-ம்:—என்ன, நீ சொல்வது ஞாயந்தான். அப்படி விட்டு விட்டால் ஊரார் என்ன சொல்வார்கள். நம்முடைய குலத்திற்கே இழிச் சொல்லல்லவா யேற்படும். உடனே நீ சென்று தேடி அழைத்துக்கொண்டுவா.

மித். வ-ம்:—அது என்னால் முடியாது தங்களிஷ்டப்படிச்செய்யுங்கள்.

சரோ. வ-ம்:—நல்லது! நீ போ (மித்ருராவ் நிற்க, சரோஜினி உள்ளே பார்த்து) குழந்தை யமுனா, இங்குவா.

யமுனாபாய். வ-ம்:—(ஓடிவந்து) ஏனம்மா அழைத்தீர்கள். ஏன் அண்ணாவின் முகம் இவ்வித மாறுதலடைந்திருக்கிறது. காரணம் என்ன?

சரோ. வ-ம்:—யமுனா? சக்குபாய் சந்திரபாகா நதிக்குப் போனவள் இதுவரை வராமலிருப்பதில் விஷயங்கள் புலப்படவில்லை. இந்த தூங்குமூஞ்சிப்பயலும் போகமறுக்கின்றான். நீயாவது சென்று கண்டுபிடித்துக்கொண்டு வா.

யமுனா. வ-ம்:—ஆஹா! அப்படியா என்ன? இதோ ஒரு நொடியில் அவளை செண்டுபோல் கொண்டுவருகின்றேனம்மா கவலையடையாதீர்கள்.

[சரோஜினி யமுனா போகிறார்கள்]

மித். வ-ம்:—அபயமென்றடைந்தோரை யாதரிக்கும் வள்ளலே என் தாயோ மகா கொடிய துன்மார்க்கி. அதிலும் என் சோதரி (யமுனுபாய்) விஷயங்களைப்பற்றிச் சொல்லவேண்டியதேயில்லை ஏனெனின்; இரண்டும் இரண்டாகவே சேர்ந்தது உம்; இருக்கட்டும் பார்ப்போம்.

## மித்ருராவ் பாட்டு

(காந்தியோ பரம ஏழை என்ற மெட்டு)

கண்ணிகள்

| | | |
|---|---|---|
| பாண்டுரெங்கா திருப் | பண்டரிநாதா | |
| பாலனெந்தனைப்பாது | காத்திடவாதா | |
| வேண்டுமிவ்வேழையின் | மீதிந்தகூதா | |
| விஜயராகவனே ஸ்ரீ | சுஜனப்ரக்யாதா | (பா) |
| பெற்றதாயாலே | பெரும்புவிமீது | |
| பேயனென்றேபெய | ரெடுத்தேனிப்போது | |
| சற்றுநீதயவுசெய் | தருளுவாய்மாது | |
| சக்குபாயின்மேல்மனஸ் | தாபந்தகாது | (பாண்) |

[போகிருன்]

சீன் முடிவு)

---

## சீன்—13. இடம்—பஜனை மடம்.

நடிகர்—பரமாத்மபாகவதர், பக்தகோஷ்டிகள், சக்குபாய், யமுனுபாய்.

[பாகவதரும் பக்தர்களும் பாடுகிருர்கள். சக்குபாய் அசையா தமர்ந்திருத்தல்.]

## பாகவதர் பாட்டு

பல்லவி

| | | |
|---|---|---|
| கோஹனி ராம | பனுவ் ஜோரி | |
| கோஹனி ராம | பனுவ் ஜோரி | (கோ) |

அநுபல்லவி

| | | |
|---|---|---|
| ஆஹேஆஹே | ராமச்சலத்தஹே | |
| லதுவன லோட்டஸ | ஹாயுரே | (கோ; |

சரணம்

தாஹேமீதி மாத்தாஜானகி
லதுவன லோட்டஸ ஹாயுரே (கோ)

பாஜாதஸரத பியாரிதோ ஜாத்தாஹே
ராமலக்ஷ்மண ஹாயுரே (கோ)

[எல்லோரும் பாடுதல்]

ராம ராம ராம சீத்தா ராம ராம ராம சீத்தா
ராம ராம ராம சீத்தா ராம ராம ராம சீத்தா (ரா)

பாக. வ-ம்:—சர்வத்தர கோவிந்த நாம சங்கீர்த்தனம்.

(எல்லோரும்) கோவிந்தா கோவிந்தா.

[சக்குபாய் எழுந்து]

சக்கு. வ-ம்:—அப்பனே! இப்போதல்லவோ என்மனஞ் சாந்த மடைந்திருக்கின்றது. ஐயனே இது தருணம் என்னுள்ளங் கசிந்துருகுகின்றதென்றால் உமது திவ்ய ஜோதிமயமான சாம ஸ்வரூப தரிசனக்கண்காக்ஷியை நேரில் காண்கில் எவ்வளவு பேரானந்த மடைவேன். என்பதை எனது ஏகநாவினல் சொல் வதற்கரிதாகுமா! இனி இவ்வித சுகானந்த சாஹரத்திலீடுபட்டி ருக்கவே துணைபுரியும் கோபாலா.

[தன்னை மறந்து நிற்கிருள் யமுனு பாய் அங்குவந்துசுற்றிப்பார்த்து]

யமுனு. வ-ம்:—நான் இக்கூட்டத்தில் சக்குபாயை எங்கு தேடி ம்யு காணவில்லை. இன்னமுஞ் சுற்றிப்பார்ப்போம் (எதிர் பார்த்து) இதோ இருக்கின்ருள். கொஞ்சமேனும் அஞ்சா மல் அவள் நின்றிருக்கும் நெஞ்சழுத்தம்பார். இதோ அந் தச் சிறுக்கியை என்னபாடு படுத்துகின்றேன் பார். (சக்கு பாய் கையைப்பிடித்துக்கொண்டு) அடி சக்குபாய் வாடி இப்படி.

சக். வ-ம்:—(திடுக்கிட்டு) நாத்தி கோபிக்கவேண்டாம். இதோ வரு கிறேன் (குடமும் சேலையும் வைத்தயிடத்தில் பார்க்க இல்லை யென்பதை யறிந்ததும் தனியாக, ஐயையோ தெய்வமே! நானென் செய்வேன். எவரோ சேலையையும் குடத்தையும் கள வாடிக்கொண்டுபோய் விட்டார்களே நாரணு? இதுவுமுனது சோதனையா, ஐயா என் மாமியைவிட நாத்தி பொல்லாதவளா யிற்றே "பட்டகாலிலேபடும்" என்பது என்பொருட்டே யேற் பட்டதுபோலும், எது வரினும் வரட்டும் நாத்தியாரே நான் மெய்மறந்து பக்தியிலீடுபட் டிருக்குஞ் சமயம் நான் வைத் திருந்த குடத்தையும் சேலையையும் எவரோ அபகரித்துப்போ

யிருக்கின்றார்கள் என்னசெய்வேன் நாத்தியம்மா நீங்கள்தான் பாதுகாக்கவேண்டும்.

யமு. வ-ம்:—என்னடிபேச்சு! பேச்சாயிது! அப்படியாசங்கதி ஏண்டி தடிச் சிறுக்கி உன்னை அம்மாவிடம் அழைத்துப்போய் பேசிக் கொள்ளுகின்றேன்.

சக். வ-ம்:—நாத்தி நானொருபாவமு மறியேன். தாமிவ்விதம் பதறிப் பேசுதல் தகாது. குற்றத்தைமன்னிக்கவேண்டும்.

[காலில் விழுந்து நமஸ்கரித்தல்]

### சக்குபாய் பாட்டு

(ராமபஜன ஹோதியா என்ற மெட்டு)

பல்லவி

கோபங்கொள்ளாதே மதனி கோடிச்சந்ரவதனி (கோ)

அநுபல்லவி

ஆபத்து வேளைதன்னி லாதரிப்பதுன்பாரம்
காப்பாற்றவேண்டி நின்றனன் கால்பணிந்தனன் (கோ)

சரணம்

மாமிக்கிது தெரிந்தால் மன்றுடியேவதைப்பாள்
ஆமுனதடிமைநானே அண்டிவந்தேனே (கோ)

யமு. வ-ம்:—நல்லது வீட்டுக்கு வாடி எல்லாவிஷயமும் அங்குபோய் பேசுவோம்.

[கையைப் பிடித்திழுத்துப் போகிறாள்.]

(சீன் முடிவு.)

---

## சீன்—14. இடம்—சரோஜினி வீடு.

நடிகர்:—யமுனா, சரோஜினி சக்குபாய் மித்ருராவ்

[சரோஜினி கேட்க மித்ருராவ் ராமாணயம் வாசித்தல்]

மித். வ-ம்:—உலகிலுதித்த மக்களனைவரும், நன்மை தீமையை யறியும் பொருட்டு ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர், அயோத்திமா நகரில் தசரதசக்ரவர்த்திக்குத் திருக்குமாரராகப் பிறந்து

ஸ்ரீராமரென நாமம்பூண்டு தாய் சொற்கடவாது வனவாசஞ் செய்யும் நாளில் பஞ்சவடிதீரத்தில் கோர ரூபமாகவந்த எந்த "சூர்ப்பனகை" உண்டோ அவளை பங்கஞ்செய்தும் அரக்கர் குலத்தையடியோடழிக்க வந்திருப்பதாகவும் கூறிய அந்த லோககர்த்தனை கார்முகில் வண்ணனைத் துதிப்போமாக.

சரோ. வ-ம்:—மித்ரு? எதனால் அந்த சூர்ப்பனகை என்பவளை பங்கஞ் செய்தார்கள்.

மித். வ-ம்:—அம்மா ஸ்ரீராமபத்னியான சீதாதேவியாரை சூர்ப்பனகை யென்ற அரக்கி கொடுஞ்செயல்புரிய நினைத்தமையால் "நினைக்கத்தனக்கு" என்பது அவளுக்கேயேற்பட்டது. அதை இக்காலத்தில் யார் நினைக்கின்றார்கள்.

சரோ. வ-ம்:—அப்படியா சங்கதி (யமுனை சக்குவுடன்வரல்) யமுனா எங்கே குடமும் சேலையும் காணவில்லை இந்த மூடம் எங்கிருந்தது.

[சக்குபாய் நடுங்கி நிற்கின்றாள்]

யமு. வ-ம்:—எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு பஜனைக் கூடத்தில் இருந்தாள் கூட்டிவந்தேன் அம்மா.

சரோ. வ-ம்:—ஏண்டி சண்டாளி, என்வீட்டுப் பண்டங்களைப்பாழ் படுத்த வந்த உனக்கு பஜனையுமா கேட்கின்றது.

சக். வ-ம்:—மாமி? நான் அறியாமற்செய்தகுற்றத்தை மன்னித்து ஆட்கொண்டருளல் வேண்டும். தேவரீரது திருவுளப்படி நடந்தும் பக்தவத்ஸலனுடைய பிரபந்தங்களை கேட்கப்பிரமானந்தம் அடைந்து மெய்ப்புளகிதங் கொண்டதுடன் அப்பக்தியிலீடுபட்டிருக்குஞ் சமயம் எந்த துன்மார்க்கரோ குடத்தையும் சேலையையும் கொண்டுபோயினர். ஆதலால் இது சமயம் அடியாள் மீது கருணைவைத் தாதரியுங்தேவி.

சரோ. வ-ம்:—என்ன! உனக்கு தயவா காண்பிக்கவேண்டும் போதும் போதும் நீ இனி அரைக் கணமும் இவ்வில்லத்தில் இருக்கக் கூடாது நீ இருந்திடிலோ இவ்வீடே பாழாகும்,

[பிரம்பால் சக்குபாயை அடிக்கிறாள்]

## சக்குபாய் பாட்டு

(மஜா தேத்தே என்ற மெட்டு)

மஹா-பாபஞ்செய்தவள் நானே-இந்தப்
பாரதப்புவிதனில் தானே (ம)

மனக்-கோபங்கொள்ளாதீர்கள் வீணே-தாங்கள்
கூறும்படிக்கு நட்ப்பேனே-கொண்ட
தாபம்தணிய வேண்டினேனே-பெற்ற
தாயெனவுமைக் கும்பிட்டேனே (ம)

என்னை-யடிக்குஞ்சிரம முமக்கேனே-நா
னதிக்ரமஞ்செய்யவில்லைத் தானே-நீர்
படிக்கும்ஞாயத்தை யறிந்தேனே-உடல்
பதைத்திருபதம் பணிந்தேனே (ம)

வ-ம்.—என்னற்றவப் பலனாற் கிடைத்த என் அருமைமாமி! என்னைக் காப்பாற்றுங்கள், நானோ ஏழைமருமகள், என்பதைக் கிஞ்சிற்றும் நினையாமல் என்மீது பாணந் தொடுக்கின்றீர்கள். அறியாதவள் செய்த குற்றங்களையகற்றி ஆதரித் தருளல் வேண்டும்.

யமு. வ-ம்:-அம்மா! அண்ணியார் ஏதோ புத்தியின்மையால் செய்தது பெரும் பிழையானாலும் இத்தடவை மன்னித்துவிடுந் தாயே.

சரோ. வ-ம்:—ஏண்டியமுனா? உனக்கென்ன திமிர் இவ்வளவு தீரமாய் என்னைக் கேட்கவந்தாய்

மித்.வ-ம்:—அம்மா, நான் சொல்வதைச் சற்று தயவுசெய்து அங்கீகாரஞ் செய்தருளும் அம்மணீ? எவ்வளவு ஹிம்ஸையை அவளுக்குச் செய்தாலும் ஏனென்று கேட்கிறாளா! அவளையித் தடவை மன்னித்து விடுங்கள் மேலும்; தங்கை யமுனாபாய் தங்களைவிட அதிக முரட்டுசுபாவ மிருப்பினும் தன் மதனியின் மீதுள்ள அன்பின் மிகுதியினால் பொறுத்தருளும்படி கேட்க தங்கைமீதுஞ் சீற்றங் கொள்ளல் ஞாயமா தாயே?

சரோ. வ-ம்:—ஏனடா! மித்ரு? நான் உனக்கு எவ்வள்வு காலம் நற்புத்தி புகட்டியும் எள்ளத்தனையாவது ரோஷமென்பதில்லாமல் எதிர்த்துப் பேசும்படியாச்சா உம் அப்படியா சமாச்சாரம்.

## சரோஜனி பாட்டு

(தொட்டிழுக்காமல்நான் என்ற மெட்டு)

பல்லவி

எதிர்த்துப்பேசவுங் காலமாச்சா-எனக்
கேடாகூடஞ் செய்யலாச்சா (எதி)

அநுபல்லவி

விதிர்த்துவிலுவிலுக்க வீசுவேன்பிரம்பாலே
விடடாஅடடாஎட்டி நடடாநடடாசும்மா (எதி)

[யமுனாவைப் பார்த்து]

(பாட்டு ஷ்டி மெட்டு)

ஏனடிசும்மா மினுக்குருய்-என்னை
இன்னுளென்றறியாது முணுக்குருய் (ஏன)

அநுபல்லவி

நானடிவுனக்கஞ்சி நடப்பேனென்றெண்ணுதே
நாட்டிலுன்சேதியைக் கேட்கவும்பண்ணுதே (ஏன)

[மித்ருராவ் யமுனுபாய் இருவரையும் பிரம்பாலடிக்க அவர்கள் ஓடுகின்றனர் சக்குபாயைப்பார்த்து]

சரோ. வ-ம்:—ஏண்டி? அடிசக்கு, இன்னமும் இருமாப்புடன் எதிரில் நிற்கின்றனையே, பயலை மயக்கிவிட்டதுடன் என் குழந்தை யமுனுவையும் உன் கைவசப்படுத்திக்கொண்டாயே போடி வெளியே பொறுக்கிச்சிறுக்கி,

[பிரம்பாலடித்து வெளியே துரத்துகிருள்]

(சீன்முடிவு)

---

## சீன்—15. இடம்—காமம்மாள் வீடு.

நடிகர்—காமம்மாள்

[பிராமண விதவை காமம்மாள் சயனித்திருக்கையில் பண்டரி நாதர் கிருபையால் பயங்கரமான கனவு கண்டு பினத்துகிருள்]

காம. வ-ம்:—ஆ! என்னயிது, என்றுமில்லாத ஆச்சர்யம்! ஐயையோ, பார்க்கவும் பயமாகிறதே கரியரூபமான பெரிய வுருவம் வாளையோங்கி வெட்டவருகிறதே ஐயோ, என்னைவிடாது போலிருக்கிறதே. சேலையையுங் குடத்தையும் ஏன் திருடிக்கொண்டு வந்தாய். உன்னுல் எனது சக்குபாய் படும்பாடு பரிதாபமாயிருக்கிறது. இந்தக்ஷணமே கொண்டுபோய்க் கொடுத்துவிடு. இல்லையேல் நானுன்னை என்ன செய்கிறேன் பாரென்று மிரட்டுகிறதே

[திடுக்கிட்டுப் பயந்தெழுந்து அங்குமிங்கும் பார்த்து]

காம. வ-ம்:—அப்பா! என்ன கனவு என்ன பேராச்சர்யம் உண்மையில் நான் கண்டது கனவுதான். உத்தமியாகிய சக்குபாயிக்குச் செய்த கொடுமையினுல், பண்டரிபுரத்துப் பகவானே என்

சொர்ப்பனத்தில் வந்து என்னை அலங்கோலப்படுத்திச் சென்றிருக்கின்றார். இனி தாமதமின்றி அச்சேலையையும் குடத்தையுங் கொண்டுபோய்க் கொடுத்து விடவேண்டும்.

[விரைந்து போகின்றாள்]

(சீன் முடிவு)

---

சீன்—16. இடம்—சரோஜினி வீடு.

நடிகர்:—சரோஜினிபாய், மித்ருராவ், யமுனாபாய் காமம்மாள்.

சரோ வ-ம்:—(மித்ருவைப்பார்த்து) அடே நீயேன் விசனிக்கிறாய். அவளெங்கே போகப்போகிறாள். தானே இங்குவந்து சேரும் தடிக்கழுதை நீ பேசாமலிரு.

[மித்ரு விசனத்துடன் வீற்றிருக்க யமுனாபாய் ஓடிவந்து]

யமுனா. வ-ம்:—அம்மா, அம்மா, ஓர் பெண்பிள்ளை, நமது சேலையையுங் குடத்தையுங் கொண்டுவந்திருக்கிறாள்.

சரோ. வ-ம்:—விரைவிற் சென்றழைத்துவா. (யமுனா போக) யாராயிருக்கலாம். களவாடிச் சென்றவன் தானே வருவாளோ.

[யமுனா காமம்மாளை அழைத்து வருகிறாள்]

காம. வ-ம்:—(குடம் சேலையைக்கொடுத்து) அம்மா சரோஜினிதேவி, சக்குபாயிடமிருந்து இவற்றைக் களவாடிச்சென்றவள் நான்தான் காலவியல்பால் எனது வறுமை மேலீட்டால் இத்துற்கிருத்தியத்திற்கு உடன்பட்டேன். அம்மணி நேற்றிரவு நான் நித்திரை செய்யுந்தருணம் என் கினவில்

விருத்தம்

கரியதோரு ருவங்தோன்றிக் கத்தியால் வெட்டவந்து
பெரியதாம் ஜாலங்காட்டி பேதைஎன் மனதைவாட்டி
அரியதோர் சக்குபாயா மவள்குடஞ் சேலைதன்னை
உரிமையாய்க் கொண்டுசேரென் றுரைத்தது விலகிற்றம்மா.

வ-ம்:—கருநிறமுடைய பெரிய வுருவங்தோன்றி, என்னைக்கத்தியால் வெட்டும் பயங்காட்டி, தனது பக்தையாகிய சக்குபாயினிடம் திருடிய இச்சாமான்களைக்கொண்டுபோயவளிடங்கொடு. இல்லாவிட்டால் இன்னமும் பன்மடங்கு உன்னை இம்சிப்பேன் என்று சொல்லி விலகிற்று. அதன்படி சாமான்களைக்கொண்டு வந்திருக்கின்றேன், ஒப்புக்கொள்ளும்.

சரோ. வ-ம்:—ஏ! முண்டே நீ இப்படியும் செய்யலாமா. அடி உன்னை லேசில் விடப்படாது. என்ன செய்கிறேன்பார்.

மித். வ-ம்:—அடி! பாபிஷ்டி உன்னலல்லவா என் மனைவியை வீட்டை விட்டுத் துரத்தும்படி நேர்ந்தது. சீ! சீ! விலகிப்போ கழுதையே வறுமை வந்தால் யாசகம் வாங்கிப்பிழைக்கிறது. இதென்ன வேலை. போ இங்கு நில்லாதே.

[காமம்மாள் போகிருள்.]

சரோ. வ-ம்:—அடே மித்ரு, பார்த்தனையா நான் அவளை வெளியில் விறட்டியதாலல்லவா போனபொருள் கிடைத்தது. இல்லாவிட்டால் இக்குடம் நம் கைக்கு வருமா உம் (யோசித்து) அந்தச் சிறுக்கியும் இன்னுஞ் சற்றுநேரத்தில் தானகவே வரப் போகிருள் பார்.

[போகிருள்]

(சீன் முடிவு)

---

## சீன்—17. இடம்—ஓர் வீதி

நடிகர்:—பரமாத்மபாகவதர், பக்தகோஷ்டிகள்,
சக்குபாய், சரோஜினிபாய்.

[சக்குபாய் தெருவில் நின்று புலம்பிக்கொண்டே]

### சக்குபாய் பாட்டு

(மாங்கா எடுத்தேனென்று என்ற மெட்டு)

கண்ணிகள்

| | | |
|---|---|---|
| கண்ணுகா ருண்யனே ஸ்ரீ | கோபாலா-என்னைக் | |
| காத்துரட்சித் தருளும் | பூபாலா | (கண்) |
| என்னையடித்து மாமி | தள்ளினளே-இனி | |
| எவ்விடம் போய்பிழைப்பேன் | மெல்லியளே | (கண்) |
| பண்டரிபுரநாதன் | பக்திசெய்ய-இந்தப் | |
| பாவம் வந்ததே | வீதிசுற்றிநொய்ய | (கண்) |
| விண்டுவென வேபுகழ் | வேதாந்தனே-இந்த | |
| வேளை எந்தனைக்காவாய்ச் | கீதாந்தனே | (கண்) |

வ-ம்:—ஐயா, கஞ்சமலர்க்கண்ணு, கார்நிறவண்ணு, பஞ்சையாகிய என்மீதிரக்கங்கொள்ளாது வஞ்சனை புரியலாமா பாண்டுரெங்கா பண்டரி புரத்துங்கா, உமதிரு பாதார விந்தந் தொழுமெனக்

கோ திக்கில்லை. நானே அநாதையானவள். அதிலும் ஆருமற்ற வள். "அவனருளூற்றால் அனைவரும் உற்றார்" என்பதுபோல் உமதருள் என்மீதிரங்கும் பக்ஷத்தில் அன்றே சகல புவனங் களுங் கொண்டாடும் புநிதவதியாவேன். இல்லையேல் இம்மண் மீதிருத்தல் கூடாது. அதுமகாதுன்பமேயாகும். திருவுள மணிபார்பன் என்னுந் திருப்பெயருனக் கேனையா வந்தது. அதை யோசித்தாவது தேவரீரது அருட்கிருபையை சற்றே யளித்தருளும் தேவா. மஹானுபாவா. மகிமை ப்ரதாபா.

## சக்குபாய் பாட்டு

(தாரணியிலன்புகொண்ட என்ற மெட்டு)

பல்லவி

தாரணியிலுன்னைப்போலோர் சாமியைக்காணேன்
சாமியைக்காணேன்-சு காமியந்தோணேன் (தா)

அநுபல்லவி

ஆருமில்லை எனக்குதவி ஆண்டவனேநின்பதவி
கோருமென்னை யாண்டிடாதக் குறைதனைச்சொல்வாய்க்
குறைதனைச் சொல்வாய்-மனத் துயர்தனை வெல்வாய் (தா)

சரணம்

அரிநமோ நாராயணா அத்வைதபாராயணா
தெரிசனந்தந்தருளயித் தினமெதிர்வாவா
தினமெதிர்வாவா நின-தடிமையைக்காவா (தா)

பண்டரிபுரநாமா பத்ராசலராமா
அண்டினோரை யாதரிக்கும் ஆனந்தப்பூமா
ஆனந்தப்பூமா எனை-யாள்பரந்தாமா. (தா)

சக். வ-ம்:—ஹே ஜனார்த்தனா! சர்வலோகசிருஷ்டி திதி சம்ஹார வர்த்தனா, நின்றுணையன்றி வேறுகதியில்லை. ஆதரிப்பதுன் பாரம் ஐயனே சுஞ்சுருணீபுரம் என்னும் நகரில் வசிக்குமென் தந்தை கங்காதர ராவும், என்தாய் கமலாபாயும், என்னை எவ் விதம் பாதுகாத்து வளர்த்தார்களோ, அதுபோலவே நீயுமென் னைக் காப்பாற்றவேண்டும்.

என்னப்பனே! நானோ நிரபராதி நினது நாமஸ்மரணையா லேற்பட்ட சிறு குற்றத்திற்காக எனதுமாமி என்னை வெளியே விறட்டி விட்டாள். புக்கிடந்தெரியேன் பண்டரிபுரநாதா, உன்பாதமே கெதி. ஏகாதசி விரதத்துக்குள் எவ்விதத்தும் உன் சந்நிதி வந்து தரிசிக்கிறேன். இன்றேநினது பண்டரிபுரம் புறப்படு கிறேன். [போகிறாள்]

[பரமாத்ம பாகவதர் பக்தகோஷ்டி களுடன் பஜனை செய்துகொண்டு வருகிருர்.]

## பரமாத்ம பாகவதர் பாட்டு

ரகுபதிராகவ ராஜாராம் பதிதபாவன சீதாராம்

[பக்தர்கள் பாடுதல்.]

ரகுபதிராகவ ராஜாராம் பதிதபாவன சீதாராம்

பாக. பண்டரிபுர ஹரிநாயகராம்
பாகவதார்ச்சித பூஜிதராம்

பக். பண்டரிபுர ஹரிநாயகராம்
பாகவதார்ச்சித பூஜிதராம்

பாக. பாண்டுரெங்க பஜனுமிர்தராம்
பத்ராசலஅரி கேசவராம்

பக். பாண்டுரெங்க பஜனுமிர்தராம்
பத்ராஜலஅரி கேசவராம்

[பாகவதர் பக்தஜனங்களுடன் பாடிக்கொண்டுவர, சக்குபாய் எதிரில்வந்து பஜனைக் கூட்டத்தாரைக்கண்டு நமஸ்கரிக்கின்ருள்.]

பாக. வ-ம்:—தீர்க்க சுமங்கலீபவ! எழுந்திருப்பா யம்மா.

சக். வ-ம்:—(எழுந்து) சுவாமி! மகாத்மாவாகிய தங்களை தெரிசித்தவுடன் எனது ஜென்ம விமோசனமானது முன்பின் அறியாத ஓர் பேதைநான் ஆயினும் ஸ்ரீ பண்டரிபுர நாதனுக் கடிமையானவள் ஆதலின் தாங்கள் என்மீது கிருபைகூர்ந்து என்னையும் பண்டரிபுரம் கூட்டிப்போக வேண்டும்.

பாக. வ-ம்:—அம்மணி! உனது பக்தியின் மகிமையே மகிமை உன்னைப் பார்த்தால் மகா வுத்தமகுண புண்யவதியாக விளங்குகிருய். உன்னை நான் எங்களுடன் அழைத்துப் போவது தகாது. தவிறவும், நீயோ அறியாச் சிறுமி. மாமன், மாமி, புருஷனுடைய பாதுகாப்பிலிருப்பவள். தனியாக நீ எங்களுடன் வருவது பழிக்கிடமுண்டாக்கும். நாங்கள் போய்க்கொண்டிருக்கிருேம். எப்படியும் உனக்கு பண்டரிநாதன் சேவை கிடைக்கும் ஆகையால் நீ உன்னிருப்பிடம் சென்றுனது கணவனையும் அழைத்துக்கொண்டு வந்துசேர் சந்தோஷமாகச் சென்றுவா அம்மணி.

சக். வ-ம்:—சுவாமி! தங்களைச் சந்தித்துப் பிரிந்துபோகவும் மனமில்லை. தங்கள் வார்த்தையைமீறி நடக்கவும் பிரியமில்லை. என்செய்வேன்.

பாக. வ-ம்:—அம்மா! நீ ஏன் விசனிக்கிருய். நேரமாகின்றது போய்வா அம்மணி.

சக். வ-ம்—சுவாமி! எப்படியாவது நானந்தப் பண்டரிநாதனை சேவிக்கவும், எனது பாபவிமோசனமாகவும் தங்களது ஞான உபதேசஞ் செய்யக் கோருகிறேன்.

பாக. வ-ம்:—அவ்விதமே! உபதேசம் பெற்றுக்கொண்டு விரைவிலுன் வீடணுகுவாய்.

[சக்குபாய் தலை குனிந்து நிற்க பாகவதர் உபதேசிக்கின்ருர்]

சக். வ-ம்:—குரு மூர்த்தியே! என்னையாட்கொண்ட இறைவனே தங்களைப்பிரியமனமில்லையே.

பாக. வ-ம்:—அம்மா! பிடிவாதந்தகாது. பகவானநுக்ரகத்தால் ஏகாதசியென்று நீயும் எங்களுடன் பண்டரிபுரம் வந்து சேருவாய் உன்னெண்ணம் ஈடேறும். சென்றுவாதேவி.

[கையிலோர் தடி யேந்தியவண்ணம் சரோஜினி வருகிருள்]

சரோ. வ-ம்:—அடியே சக்கு என்னடியிது யாரடியிவர்கள் இங்கென்னடிவுனக்குவேலை.

சக். வ-ம்:—மாமி! கோபிக்க வேண்டாம் பண்டரிபுரம் போக உத்திரவு தரவேண்டும்.

[நமஸ்கரித்து நிற்கிருள்]

சரோ. வ-ம்:—ஆ! அப்படியா சமாச்சாரம் பண்டரிபுரம் போக உத்திரவுவேறு வேண்டுமோ, இது யார் சொன்ன தந்திரமடி.

பாக. வ-ம்:—அம்மையே! இம்மகாவதி பாண்டுரெங்கன் பக்தையாவள். பண்டரிக்கு வருகிறேனென்று என்னிடம் முறையிட்டாள். நான் தடுத்தேன். நல்ல சமயம் தாங்களும் வந்துவிட்டீர்கள். அவ்வம்மையை அழைத்துப் போய் அவளது கணவருடன் கூட்டிப் பண்டரிக்கு அனுப்பிவையுமம்மா.

சரோ. வ-ம்:—ஆர்காணும் நீர். யாரைபண்டரிக்கனுப்புறது, ஊர்வீட்டுப்பருப்பு நெய் சாதத்தை விலாப்புடைக்கத்தின்று கொழுத்துப் பாகவதர் பட்டம் பெற்றுக்கொண்ட வுமக்கு வேறுவேலை கிடையாது. நீர்போய் சுற்றியலைவதைவிடுத்து அறியாப்

பெண்ணை மயக்கி யழைத்துப் போகவா எத்தனிக்கிறீர் சும்மாப் போகிறீரா இப்போ தென்னசொல்கிறீர்.

பாக. வ-ம்:—(காதில் கையை வைத்து) நாராயணு நாராயணு ஹரி ஹரி அம்மணி புத்தி வந்தது விலகி நில்லுமம்மா நாங்கள்போய் வருகிறோம்.

சக். வ-ம்:—சுவாமி என்னையாட் கொண்ட இறைவனே, அடியாளை யும் அழைத்தேகவேண்டும்

சரோ. வ-ம்:—ஆ! ஹா! அப்படியா சமாச்சாரம் அடே பாகவதா, என்மருகிக்கு மந்திரம் போட்டு மயக்கி எம்மைக் குடிகெடுக்க வழிதேடினுயல்லவா. இதோபார் இப்போதே கிராமாதிகாரி களை அழைத்துவந்து உனக்கும் உன் கோஷ்டிகளுக்குந் தகுந்த சிக்ஷைசெய்து வைக்கிறேன் தடிப்பயலே.

[தடியை ஓங்கி வீசுகின்ருள். பாகவத கோஷ்டிகள் பய ந்து வோடுகின்றனர்]

சரோ. வ-ம்:—(சக்குபாய் கையைப்பிடித்துக் கொண்டு) அடி பேய் பிடித்தச் சிறுக்கி எதுவோ கோபத்தால் போடி என்று சொன் ஞல் நாயைப் போல் ஓடிவந்து விட்டாயே ஓடுகாலி வாடிசொல் கிறேன்.

[இழுத்துப் போகிருள்]

(சீன் முடிவு.)

---

## சீன்—18. இடம்—வீடு.

நடிகர்—மித்ருராவ், யமுனுபாய், சக்குபாய், சரோஜினி

[சரோஜினி சக்குபாய் கையைப் பிடித்துவந்து]

சரோ. வ-ம்:—அடே! மித்ரு, வாடா இப்படி அங்கென்ன செய்கின் ருய். சீக்கிரம் வா.

[மித்ருராவ் வெளியில் வருகிருர்]

### சரோஜினி பாட்டு

(நாச்சோகாணு என்ற மெட்டு)

பல்லவி

பாராய்-கண்ணுல்பாராய்-சக்கு நாயகியைக் பாயெனுமுன்னெரு கண்ணுல் (பா)

அநுபல்லவி

ஊரைவிட்டோடு முபாயமுங்கொண்டு
உண்டு திரியுந்தடி முண்டரைக்கண்டு
ஓடுகின்ருள் குதித் தாடுகின்ருள் கண்ணுல் (பா)

பண்டரிக்ஷேத்திரப் பாசுரம்பாடி
பாகவத கோஷ்டி யாருடன் கூடி
பயணங்கொண்டாள் மனப்-பயமுமுண்டா கண்ணுல் (பா)

வ-ம்:—பார்த்தனையா உனதருமை மனைவியை: பேய்பிடித்த இந்தப் பெரும்பூதத்தைக்கொண்டு வந்தாயே என் குடித்தனத்தைக் கெடுப்பதற்கு எங்கெங்கு தேடுவது. எத்தனை வீதி சுற்றி யலைவது. கடைசியாக பஜனைக்கோஷ்டிகளுடன் கூடிக்கொண்டு பண்டரிக்கும் போகப் பயணங்கொண்டிருக்கிருள். பார்த்தழை த்து வந்தேன்.

மித். வ-ம்:—அம்மணி அவள் போனுல் போகட்டும். சனி விலகிற் றென்று சந்தோஷமாயிருக்கலாமென்று சொன்னுலுங் கேளா மல், அவளைத் தேடிப்பிடித்து வந்து அலக்கழிப்பதுடன், எனக்கும் அளவற்ற வருத்தத்தையும் அவமானத்தையும் விளைவிக்கிறீர்கள். தங்களுக்கு இது தர்மமல்ல தாயே.

சரோ. வ-ம்:—(கோபத்துடன்) என்ன சொன்னுயடா. தருமநீதி களை இனிமேல் உன்னிடந்தான் நானறிந்துகொள்ளவேண்டு மோ. தடிப்பயலே உள்ளே போடா.

[மித்ரு விசனத்துடன் போக, சக்கு பாயைப்பார்த்து]

சரோ. வ-ம்:—அடி! துன்மார்க்கி நீ செய்த குற்றத்திற்காக வெளி யே போவென்று சொன்னுல் விட்டால் போதுமென்று ஓட்ட மெடுத்தனையோ.

சக்கு வ-ம்.—மாமி! ஈதென்ன வார்த்தை கேட்க ஆச்சர்யமாக யிருக்கிறது. எல்லாம் நன்கு கற்றுணர்ந்ததாமே இவ்வாறு உரைக்கலாமா? உலகில் எவர்களும் பகவான் நாமத்தை உச் சரிப்பது நன்மார்க்க மல்லவா? சர்வ ஜகத்காரண பூதனையும், சிருஷ்டி, திதி, சம்மாரம் என்னும் முத்தொழிலுக்கும் அதிப னையும், எள்ளுக்குள் எண்ணை போலவும், பூவும் மணமும் போலவும், நகமும் சதையும்போலவும் இருக்கப்பட்ட என்னப்ப னுடைய நாமத்தைச்சொல்லும் திவ்விய காலக்ஷேபத்தி லீடுபட் டிருந்தேனேயன்றி வேறன்று. என்னை மன்னித்தருளும் மாமி.

சரோ. வ-ம்:—நல்லது மன்னிக்கிறேன் (உள்ளேபார்த்து) அடி யமுனு,

யமுனு. வ-ம்:—(வெளியில்வந்து) ஏனம்மா ஏனழைத்தீர்கள்.

சரோ. வ-ம்:—உள்ளேசென்று ஒரு கயறெடுத்துக் கொண்டுவா.

யமு. வ-ம்:—தாயே கயறெதற்காக.

சரோ. வ-ம்:—போய்க் கொண்டுவாடி என்றால் தடுத்துக் கேட்கின்றுயே.

[பிரம்பைநோக்க, யமுனு உள்ளே சென்று கயிறொன்றை விட்டெரிகிருள்.]

சரோ. வ-ம்:—அம்மா சக்கு இப்படிவா. சிறிதுநேரம் இந்தத் தூணில் சாய்ந்துகொண் டிருந்தால் பண்டரிநாதன் பாததெரிசனம் தருவார்.

[சக்குவைஇழுத்துத் தூணில் பிணைத்துக் கட்டிவிட்டுப் போகிருள்.

## சக்குபாய் பாட்டு

(பிகடிபனுதோ என்ற மெட்டு)

கண்ணிகள்

| | | | |
|---|---|---|---|
| மூலாதரா | | கோபாலா | |
| முகுந்தா | வைகுந்த | சீலா | |
| பாலாழி | யோக | மேலா | |
| பாராய் | பக்தானு | கூலா | (மூல) |
| பூபாரங் | தீர்க்கும் | புண்யா | |
| போற்றுஞ் | ஜீவகா | ருண்யா | |
| காப்பாற்று | வாய் | லாவண்யா | |
| கமலாசனு | | சுகண்யா | (மூல) |

சக். வ-ம்:—ஓம் ஹரிஹரி! முரஹரி! நரஹரி! அம்புசாக்ஷா! அச்சுதா! பஞ்சாயுதா! பாண்டவசமேதா! லக்ஷ்மிவினோதா! கமலபாதா! ஆதிமத்யாந்தரஹிதா! அனுதரக்ஷகா! அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா! பரமானந்தா! முகுந்தா! வைகுந்தா! கோவிந்தா! ஜனுர்த்தனு, கருடவாகனு! ராக்ஷஸமர்த்தனு! சேஷசயனு; நாராயனு! பிரம்மபாராயனு! கேசவா! ஸ்ரீதரா! தாமோதரா! துளசீதரா, பீதாம்பரா, பரமதயாபரா, பரமேஸ்வரா, சங்குசக்ரா, சர்வேஸ்வரா, கருணுகரா, கருணையங்கடலே என்னைக்கடைக்கண்பார்த்து காத்து ரக்ஷிக்கவேண்டுகிறேன் தேவதேவனே மஹானுபாவனே.

ஜகத்ரக்ஷகா, நான்படும்பாடு உன்றிருவுளச்சம்மதமோ ஆபத்பாந்தவன் அனுதரக்ஷகன் என்னும் பெயர்கொண்டநீ இவ்வேழையை

இவ்விதம் பரிசோதிக்கலாமா. தேவேந்திரனுடைய கல்மாரியை விலக்கிய கர்த்தனே என் கண்மாரியை விலக்கியாட்கொள்ள வேண்டும் என்னப்பனே.

[மூர்ச்சித்து நிற்கிறாள் ஸ்ரீகிருஷ்ணவுருவம் தோன்றி சிரசின் மேற் கையை வைத்து ஆசீர்வதிக்கிறது]

(சீன் முடிவு.)

---

## சீன்—19. இடம்—துவாரகை ஸ்ரீகிருஷ்ண மாளிகை.

நடிகர்:—கிருஷ்ணன் ருக்மணி

### ருக்மணி பாட்டு

(பக்ஷமிருக்கவேணும் என்ற மெட்டு)

பல்லவி

மாதவர்துதி ராஜ கோபாலா—இந்த
மாது என்னுசைக் கேற்றமணவாளா (மா)

அநுபல்லவி

காதலின்பாக்யங் கலவிக்காரோக்யங்
காட்டுமதன போஜ சிங்காரா—ஒரு
காரணமான சேதியைக் கேளாய் (மா)

சரணம்

தாய்தந்தை என்றுநம்மைக் கைதொழுவாள்—சக்கு
பாயென்னும் பெயர் புனைந்தே வளர்வாள்
சேயவள் சோகம் செப்பவனேகம்
தினமுமுன் கீர்த்தனம் பாடுகின்றாள்—நல்ல
திருவடிதெரி சனந் தேடுகின்றாள் (மா)

ருக். வ-ம்:—நாதா! சுஞ்சுருணிபுரத்தில், மிக்கமேதவிகளான, கங்காதரராவ், கமலாபா யிருவருக்கும் பிறந்த பெண்பிள்ளை யொருத்தி சக்குபாயென்னும் நாமங்கொண்டவள், கரவீரபுரம், மூர்த்திராவ், சரோஜினிபாயின் குமாரன் மித்ருராவுக்கு வாழ்க்கைத் துணைவியாகி, மாமியாகிய சரோஜினியால் படாத பாடுபட்டுத் தமது பதாம்புஜமே கெதியென்றுத் தூணில் கட்டுண்டுக் கதறுகின்றாள். தாங்கள் இது விஷயங்க ளாதியோடந்தத்தையு மறிந்திருந்தும் பாராமுகமா யிருப்பது நன்றாமா பரமாத்மா.

(பாட்டு ஷெடி மெட்டு)

பக்தையவளின்முகம் பார்ப்பீரே—அவள்
பாசபந்தவினையைத் தீர்ப்பீரே (பக்)

சத்தியம்செல்வீர் சங்கதிசொல்வீர்
சக்குபாயென்னு மந்தமடமாது—படுஞ்
சஞ்சலந்தவிர்த் திடுமிப்போது (மாத)

ருக். வ-ம்:—நாதா வேறுநான் சொல்ல வேண்டியதென்ன. தாங்களறியாத விஷயமொன்றில்லை. சக்குபாயின் முறையீட்டைக் கேட்க என்மனஞ் சகிக்கவில்லை தற்காத்தருள வேண்டும் ப்ரபு.

கிரு. வ-ம்:—நாயகி! என்மேற் பிசகில்லை. நானவளை யாதரிக்கத் தடையில்லை. இருக்கினும் இலட்சுமியாகிய உனது கடாக்ஷம் அவளுக்கிதுவரை யில்லாததால் அவளிக்கஷ்டமுற நேர்ந்தது. இனியவளுக் கொருகுறைவுமில்லை. தற்சமயமே சென்றவளைக் காப்பாற்றுகிறேன் அதற்கும் உன் சகாயம் சிறிது வேண்டும்.

ருக். வ-ம்:—காதலா! நான் செய்யவேண்டிய சகாயமென்ன தங்களாலாகாதது என்னாலாகப் போகிறதா

## கிருஷ்ணன் விருத்தம்

இக்குவலயத்தோ ரேற்றும் இலட்சுமி வடிவமார்ந்த
பக்குவமானஎந்தன் பாவைருக்மணியே கேளாய்
சக்குபாயென்னுமாது தனக்கொரு துணையாயாருஞ்
சொக்கிடு மயல்வீட்டுள்ள சுந்தரிபோலே வாராய்.

கிரு. வ-ம்:—கண்மணி! ருக்மணி சக்குபாயென்னும் நமது பக்தை பண்டரிபுரம் சென்று நம்மைத் தெரிசிக்க வேண்டிய பக்தியில் மிக்க மனமுடையவள். அதற்கு எறுமாறாக அவள்மாமி அவளைக் கொடுமைசெய்து வருகிறாள். தவிறவும் சக்குவை நான் எவ்வளவுதூரம் எத்தனைவிதம் பரிசோதிக்க வேண்டுமோ எல்லாஞ் செய்தானது. இனி யவளைக் காப்பாற்றவேண்டிய கடமைதான். ஆகவே இப்போது கட்டுண்டிருக்கும் சக்குபாயின் புருஷனைப்போல் நான்சென்று அவளது கட்டையவிழ்த்து பண்டரிக்குப்போக விடைகொடுத் தனுப்புகிறேன். சக்குபாயின் அடுத்தவீட்டுப் பெண் சுந்தரி என்பவளைப்போல் நீ வடிவெடுத்து அவளுடன் பண்டரிபுரம் சென்றுவா மேல் நடக்கவேண்டியதை நான் கவனித்துக் கொள்கிறேன்.

ருக். வ-ம்:—பிராணகாந்தா! இதுவுந் தக்கயோசனைதான் விரைவிற் செல்வோம் வாருங்கள். (போகின்றனர்)

(சீன் முடிவு)

---

சீன்—20. இடம்—சரோஜினி வீடு.

நடிகர்—சக்குபாய், மாறுவேட மித்ருராவ், பமுனுபாய், மூர்த்திராவ், சரோஜினிபாய், மாறுவேட சக்குபாய், உண்மை மித்ருராவ்.

[தூணில் கட்டுண்டிருக்கும் சக்கு பாய் பண்டரிபுரநாதனை நினைந் துருகுதல்]

### சக்குபாய் பாட்டு

(சிதம்பரம்போகாமல் என்ற மெட்டு)

பல்லவி

பண்டரிபுரம்போகா திருப்பேனே-ஜென்ம
பாரத்தைப் பல நாளுஞ்சுமப்பேனே (ப)

அநுபல்லவி

அண்டினோரைக் காப்பாற்றும் ஹரிவிட்டலேகோவிந்தன்
புண்டரீக வரதன் புவனம் புகழ்வைகுந்தன் (ப)

சரணம்

ஆதிமூல மென்றோதும் ஆனையைக்காத்தவன்
மாதுசீதை யம்மனின் மனக்குறையைத் தீர்த்தவன் (ப)

விண்டுவின் ரூபமாய் விளங்குங்கமலக்கண்ணன்
அண்டர்கள் துதித்திடு மலைகடற்றுயில் மன்னன் (ப)

வ-ம்:—“கருப்பைக்கும் முட்டைக்கும் கல்லினுட் டேரைக்கும், விருப்புற் றமுதளிக்கும் மெய்யன் உருப்பெற்றால், ஊட்டி வளர்க்கானே ஓ! கெடுவாய் அன்னாய்கேள், வாட்ட முனக் கேன் மகிழ்” என்று கூறிய முதுமொழிப்படி, அடியாளை கர்ப் பத்திலிருந்து கருவாக்கி உருவாயமைத்து வெளிப்பட்ட பின் குழந்தையென பாவித்து பாலூட்டி தாலாட்டி பாலன்னத்தை யூட்டி பாதுகாக்கும்படிச் செய்தீர். பரந்தாமனே! மேலும்; கருப்பக்குழியில் பத்துமாதம் இருக்குமளவும் பாதுகாத்து வந்த புண்ய சொரூபராகிய நீர் இப்போதும் எப்போதும் காப் பாற்றுவீர் என்றும் “கடவுளை நம்பினர் கைவிடப்படார்” என்பதையும் நம்பியே இருக்கின்றேன் ஆதலினாலே; எம்பெரு மானாகிய தேவரீர் திருவுள மகிழ்ந்து அடியாளை இந்தவேளை ஆதரிக்க முன் வரவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

[மாறுவேடம் புனைந்த மித்ருராவ் வருகிறார்]

மித். வ-ம்:—கண்ணே! கலங்காதே இனி எதற்கும் அஞ்சாதே எதுவோ எனது தாயென்னும் பேய் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு உன்னை இவ்வித தீங்கிற்கெல்லாம் ஆளாக்கினேன். இதோ உனது கட்டை அவிழ்த்து விடுகிறேன்.

[சக்குபாயின் கட்டவிழ்த்து விடுகிறார். சக்குபாய் மித்ருவைப்பணிந்தெழுந்து]

சக்கு. வ-ம்:—பிராணகாந்தா! தாங்கள் இவ்வேழையினால் மாமியிடம் பட்டபாடெல்லாம் போதாதென்று இன்னமும் வேதனையடையவோ என்னை அவிழ்த்து விட்டீர்கள். மாமியவர்கள் காணில் கோபித்துக்கொள்வார்கள். மீண்டும் என்னை முன்போலவே கட்டி விடுங்கள் நாதா?

மித். வ-ம்:—கண்மணி! நீ இனி யாதொன்றுக்கும் கவலைப்படவேண்டாம் இனி நான் எவர்க்கும் பயப்படவில்லை நீ இந்த க்ஷணமே பண்டரிபுரஞ் சென்று பகவானை சேவித்து வருவாய்.

சக்கு. வ-ம்:—நாதா! நான் தனித் தெவ்விதம் போவேன் மேலும் "துணையோடல்லது நெடுவழி போகேல்" என்னும் பெரியாருரைத்த திருமொழிப்படி நடத்தல் அவசியமல்லவா? என்ன தெரிவிக்கின்றீர்கள்.

மித். வ-ம்:—பெண்ணே அடுத்த வீட்டு சுந்தரியும் பண்டரிபுரம் போகிறாள். அவளுடன் சேர்ந்து சென்று வருவாய்.

[சக்குபாய் விரைந்து போகிறாள். மித்ரு வேடங்கொண்ட கிருஷ்ணன் சக்குபாயாகமாறி தூணில் கட்டப்பட்டிருக்கிறார். உண்மையான மித்ருராவ் வந்து]

மித். வ-ம்:—இதுவரையிலும் நான் தாய்சொல் தட்டாது நடந்து வந்தேனெனினும், என் மனைவியின் குணாதிசயங்களைப் பார்க்குமளவில், இவளை விடச் சிலாக்கியமானவள் என் தாயல்ல என்பது உண்மை. ஆகவே இது சமயம் சக்குவின் கட்டவிழ்த்து விட்டு மறுகாரியம் பார்க்கவேண்டும்.

[கிருஷ்ண சக்குபாயின் கட்டவிழ்த்து விட சக்குபாய் எழுந்து]

சக். வ-ம்:—நாதா இதென்ன புது விநோதமாக இருக்கின்றது. தங்களை மாமன்மாமி கோபிப்பார்களே வேண்டாம் வேண்டாம் முன்போலவே கட்டிவிடுங்கள்.

மித். வ-ம்:—கண்ணே! என் தாய் விஷயமாக நானினி கிஞ்சிற்றும் பயங்கொள்ளமாட்டேன். நானும் என் தாயுடன்கூடித் தெரியா விதமாகஉனக்குச் செய்த அபசாரங்களுக்கு மன்னிப்புக் கேட்கவேண்டிய வனுயிருக்கிறேன். காதலி! நீ வருத்தமடை யாதே.

மாய சக். வ-ம்:—நாதா; சர்ச்சனர் மெச்சும் நற்குணம் படைத்த விற்பனரான மஹானுபாவன் என்னப்பன் சகலலோக சரண்ய னன ஸ்ரீமந் நாராயணனுடைய அஷ்டாக்ஷரப்பொருளின் உதவியால் எனக்கெவ்வித யிடர் வரினும் அதை இன்பமாகவே களிப்புடன் ஏற்றுவந்தேன் இனியும் ஏற்றுக் கொள்ளத்தயார் தாங்கள் தாய்வார்த்தைமீறி என்னேயவிழ்த்தீர்கள். வேண்டாம் முன் போலவே யிணைத்து விடுவீர்காதலா

மித். வ-ம்:—கருத்திற்கிசைந்த காருண்யவதி நின்பெருமை சாலவுஞ் சிறந்ததேயாகும். நான் மந்தமதியுடன் என் தாயோடு சேர்ந்து உனக்கிழைத்த தீங்குகளை இனி அறவேமறந்துவிடு. உனது நற்காலத்தின் பலாபலன் கைகூடியது நீ நம்பிய கருணைவள்ள லின் திருவருளே என்னையும் பௌவ்வியப்படுத்தியது மேலும்,

“மலர் மிசையேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்” (குறள்)

என்ற தெய்வப்புலமை திருவள்ளுவரின் திருவாக்கு இன்றே மெய்ப்பித்தது நாமிருவரும் சுகஜீவர்களாய் வாழ்வோமென் பதிற் சையமில்லை.

சக். வ-ம்:—நாதா! தங்களது உதார குணங்கள் எனக்கென்றும் தெரியாமலில்லை “எய்தவனிருக்க அம்பை நோவது” போல முன்னுல் செய்தவினையின் கன்மங்களை அனுபவித்தேன் அதை நினைக்கின் என்ன பலனிருக்கின்றது. இன்னும் கொடிய வினை தொடாமலிருக்கவும், குற்றமற்ற மனத்தினளாய் ஒருங்கே சேர்ந்து வாழவும், வேண்டுவதவசிய மாதலால் சென்றதை நினைந்து வருந்தல் பேதமை குணமாகு மாதலால் அதை நினையா மல் மறந்து விடுங்கள்.

மித். வ-ம்:—நல்லது நாயகி! இருயிதோவருகின்றேன் (உள்சென்று ஆடையாபரணங்களை எடுத்துக்கொண்டு வந்து) மாதரசியே நீ இவ்விதம் இருப்பது நன்றாயில்லை இதை அணிந்து கொள் வாய் வெகுரம்மியமாக யிருக்கும்.

சக். வ-ம்:—நல்லது நாதா! தங்களபிப்பிராயப்படியே நடக்கின்றேன் இப்போதல்லவோ தங்களினது குணதிசயங்களைக் கண்டேன். இதோ அணிந்து கொள்கின்றேன் வாருங்கள் அந்தப்புரம் போகலாம்.

மித். வ-ம்:—சரி! வா செல்வோம்.

[இருவரும் போகுதல் யமுனு பாய் வந்து பார்த்து]

வ-ம்:—ஐயையோ! இதென்ன விபரீத செய்கையாக யிருக்கிறது சக்குபாயை அம்மாகட்டிவைத்திருந்தார்கள் காணுமே! ஓஹோ! கட்டையவிழ்த்துக்கொண்டுபோய்விட்டனளே என்ன செய்கிறேன் பார் அம்மா அம்மா!

சரோ. வ-ம்:—ஏண்டியம்மா யமுனு என்ன விசேடம்?

யமு. வ-ம்:—பிணைக்கப்பட்டிருந்த சக்குவைக்காணுமே!

சரோ. வ-ம்:—என்ன என்னு? அவளைக்காணுமா! எங்குபோயிருப்பாள் அந்தப் பயல் மித்துருதான் அவிழ்த்துவிட்டிருப்பான் அடே மித்ரு மித்ரு இங்குவா?

[மித்ரு சக்குபாய் இருவருஞ் சேர்ந்துவருதல்]

சரோ. வ-ம்:—(வயிற்றில் அடித்துக்கொண்டு) ஐயையோ அடிபாவி என்மகன் "மண்டையைக்கிறி உண்டையைப்பாச்சிவிட்டு" இங்கிருந்த ஆடையாரபணங்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டு போக பார்த்தனையோ? அப்பாமகனே மித்ரு மோசம்போகாதே உன்னைக்கெடுத்து விடுவாள் சீக்கிரம் ஆடையாபரணங்களை கழட்டி விடுவாய் இல்லையேல் இருவரையும் பிண்டம் பிடித்து விடுவேன்.

மித். வ-ம்:—என்ன தெரிவித்தாய் ஜாக்ரதையாகப் பேசு உன்னை தாயென்று விட்டேன் இல்லையேல் துண்டமாக்கி யிருப்பேன் இதுவரையிலும் நடந்தது போகட்டும் இனிமேல் மரியாதையுடனிருக்கவேண்டும் தெரியவருமா.

சரோ. வ-ம்:—என்னடா! என்னதெரிவித்தாயடா உனக்கு யார் போதித்த போதனையிது. அந்தச் சிறுக்கியின் தலையணை மந்திரமடாயிது ஏண்டா மித்ரு? நான் பத்துமாதம் சுமந்துபெற்ற தாயல்லவா உம்; வேண்டாமடா, என்சொல்லைத் தட்டாதடா, அப்பாவாடா என்செல்வமே.

மித். வ-ம்:—சட் அப்புரம் பே. பேசாமல் வாயைமூடு!

## மித்ரு பாட்டு

இராகம்-அடாணு, தாளம்-ஆதி.

பல்லவி

செல்லுவாய் தூரச் செல்லுவாய்—இங்கு
சிரிப்புங்கெலிப்புடனே பேசவந்ததுபோதும் (செ)

அநுபல்லவி

அல்லும்பகலுமவள் அவஸ்தைபட்டதுபோல
சல்லியப்பிசாசேவுன்னைத் தண்டிப்பேன்கண்டிப்பேன்தூரச் (செ)

சரணம்

எதுஇனிமேலுந்தன்சூது எனதிடஞ்செல்லாது
வருமேபெருந்தீது வந்திடிலோதப்பாது—இனி
வாதுகள்பேசியேநின்றால் வருத்தம்பொருத்தமாகும்
சாதுக்கள்போற்றிடுஞ்சங்கு சக்ரபாணியைப்பணிந்து (செ)

மித். வ-ம்:—நான் எத்தனைகாலம் பொறுத்திருந்தேனோ பொறுத் தாய் விட்டது இனி பொறுக்கமுடியாது இதைவிட்டகல்வாய் கிழட்டுப்பிணத்திற் கினியென்ன அதிகாரம்.

சரோ. வ-ம்.—பெற்ற கொடுமையாயிது! நல்லதப்பாமகனே; உன் பேரில் கோபித்துக்கொள்வதில் என்னபலன் நான்வந்த விதி "பாக்காயிருந்தது தோப்பாய்விட்டது" மேய்ப்பாரேன். இனி நமது ஜம்பம்பலிக்காது மரியாதையுடன் சென்றால்தான் நம் மானம்நிற்கும் இல்லையேல் ஊரார் கேலிசெய்யநேரிடும் பேசா மல் போய்விடுவதுதான் நம்போன்ற பெருமையுடையோர்க் கழகாகும் உம்; பழூரு வாம்மா போகலாம்.

[இருவரும் உட்செல்லல்]

சக். வ-ம்:—நாதா! தங்களுக்கென்ன யிவ்வளவுகோபம் வந்தது? என்று மிப்படிவராதே! தங்களை அவர்கள் சுமந்துபெற்று சகல சுக துக்கங்களுடனே ஆதரித்துவந்த தாயல்லவா என் மாமீ! அவர்களை ஒருபோதும் கடுஞ்சொற்களால் பேசாதீர்கள்? அவர் களாலல்லவோ நான் தங்களையடைந்த பெரும்பாக்யத்தைப் பெற்றேன் இனி இவ்வித கோபத்தை கொள்ளல் வீண்பழியே யாகும்.

மித். வ-ம்:—சக்கு நீ ஒன்றுந் தெரியாதவளல்ல இதுவரையிலும் நானும் ஏதோ தெரியாமற் செய்கிறார்கள் அவர்களாகவே நன்மை தீமை யறிந்து நடப்பார்கள் என்று எதிர்பார்த்தேன் நல்வழியை பின்பற்றவில்லை. மேலும், இந்த வாலிப காலத்தில் உன்னைவிட்டு தனித்திருக்கவும் எனக்கு மனமில்லை. ஆதலால், கடுமையாகப் பேசினேன் இனி நல்லபுத்தியுட னிருப்பார்கள்.

சக். வ-ம்:—வாருங்கள் காதலா! பலகாரபக்ஷணங்கள் தயாரிலிருக் கின்றது உண்டுகளிக்கலாம் இனி என்மாமி அவர்களை என்முன் பாக கோபிக்கலாகாது.

மித். வ-ம்:—இல்லை இல்லை; வருவாய். [இருவரும் உட்செல்லல்]

(சீன் முடிவு)

சீன்—21. இடம்—வீதி.

நடிகர்—சக்குபாய், மாறுவேடம் புனைந்த சுந்தரி, பரமார்த்த பாகவதர், பக்தகோஷ்டிகள்.

[சக்குபாயும், மாறுவேட சுந்தரியும் வெளிவந்து]

சுந். வ-ம்:—அம்மா சக்குபாய் உன் கணவர் பண்டரிக்குப்போக, உத்திரவு கொடுத்தாரா. உன் மாமி சரோஜினி சம்மதித்தாளா.

சக். வ-ம்:—அம்மா சுந்தரி நான் வந்தது என் மாமிக்குத் தெரியாது. பண்டரிநாதன் கிருபையால் எனது பர்த்தா மனமிறங்கி எனக்கு உத்திரவு கொடுத்தார். அப் பகவானே எனக்கு உன்னைத் துணையாக சேர்த்து வைத்தார்.

சுந். வ-ம்:—அடுத்து முயன்றாலு மாகுநாளன்றி எடுத்த கருமங்களாகாது. என்பதுபோல் எந்தக்காரியமும் எப்போது முடிவு பெறுமோ அப்போதுதானே முடியும். அதோ பண்டரிக்குப் போகும் பாகவதர் கூட்டமும் எதிரே செல்கின்றது. நாமும் அவர்களுடன் கலந்து செல்வோம். சீக்கிரம் வா.

[பாகவதருடன் பக்தர்கள் பஜனை பாடிக்கொண்டு வருகின்றனர்]

## பக்தர்கள் பாட்டு

(வர்த்தகர் குலத்துதித்தமாரா என்ற மெட்டு)

கண்ணிகள்

பாண்டுரங்க நாமமதைப்பாடு-நல்ல
பரமபக்தர்களைக் கொண்டாடு-நம்மை
யாண்டருள்பண்டரி புரம்நாடு-கிருஷ்ண
னடியவர்தன துடன்கூடு (பாண்)

யாதவர்குலத்துதித்த மாயன்-அசோதை
அன்னைதரும் வெண்ணையுண்டவாயன்-துதி
மாதவர்தமக்கொரு சகாயன்-இந்த
மாநிலமதிக்கும் நன்னேயன் (பாண்)

[சுந்தரியும் சக்குபாயும் பாகவதர் கூட்டத்துடன் சேர்ந்து போகின்றனர்]

பாக. வ-ம்:—பக்தர்காள் அதோ தெரிவதுதான், பண்டரி நாதன் சந்நிதானத்தின் கோபுரம். அதுதான் பண்டரிபுரம் சற்று தூரம் போவோமாகில் பீம நதியைக்காணலாம். சகலரும் அந்நதியில் ஸ்நானம் செய்துவிட்டு அங்கிருக்கும் நந்தவனத்தில்

புஷ்பம் பரித்துக்கொண்டு பண்டரிநாதன் சந்நிதானம் செல்ல வேண்டும். சகலரும் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்து கோபுர தெரிசனம் செய்யுங்கள்.

[சகலரும் பாகவதர் சொற்படி வணங்கி நிற்கின்றனர்]

## பாகவதர் பாட்டு

ராம ராம ராம சீதா

[எல்லோரும் பாடிக் கொண்டே போகின்றனர்.]

(சீன் முடிவு.)

---

## சீன்—22. இடம்—பண்டரிநாதன் சந்நிதி.

நடிகர்:—பரமாத்மபாகவதர், பக்தகோஷ்டிகள், சக்குபாய், சுந்தரி, திகம்பரராவ், கருடன், ஜோகி.

[பக்தர்கள் ஒவ்வொருவராக வந்து பணிகின்றனர். கடைசியாக சுந்தரியும் சக்குபாயும் வருகின்றனர்]

## சக்குபாய் விருத்தம்

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய்க் கமலச்செங்கண்
அச்சுதா வமரரேறே ஆயர்தங்கொழுந்தே என்னும்
இச்சுவை தவிறநான்போய் இந்திரலோக மாளும்
அச்சுவைபெரினும் வேண்டேன் அரங்கமா நகருள்ளானே.

வ-ம்:—தேவா! நினது சேவையின் திவ்விய மங்கள வினோதம் நிதரிசனமாகக் கண்டேன் அப்பா. இவ்வுன்னத மகிமையினது குணாதிசயங்களின் மஹாத்வத்தின் ஜோதியை அரியாத பாபிகளன்றோ இவ்வவனியில் உழன்று வருகின்றனர். ஐயனே! உமது கருணாகடாக்ஷ வீக்ஷண்யத்தின் திருவருளை இவ்வேழையின்மீது செலுத்தியுமது திருவடி நிழலில் சேர்த்தருளல் வேண்டும். இனி நான் இவ்வுயிருடன் திரும்பாதிருக்கும் வரமொன்றே எனக்கு சிலாக்கியம் வேறொன்றுமில்லை தேவரீரது தரிசனம் பிரம்மானந்தத்தைக் கொடுத்தது மெய்யனே.

[புஷ்பத்தை சுவாமியின் பாதத்திற் போட்டுக் கீழ்விழுந்து பாதமிரண்டையும் பிடித்துக்கொண்டதும் ஜீவன் பிரிகிறது. வெகுநேரம் வரை எழுந்திராதகைக் கண்ட சுந்தரி சக்குபாய் இறந்தாளென்று கூச்சலிடுகிருள். கோயிலில் குழப்பமுண்டாகிறது]

பாக வ-ம்:—(வந்து பார்த்து) ஹே பக்தர்காள். ஓடிவாருங்கள் ஓடிவாருங்கள். காவீரபுரத்தில் அன்று நம்முடன் வந்து வாதிட்டுச் சென்றயுவதி மறுபடியும் ஓர் பெண்துணைக்கொண்டு நம் கூட்டத்திற் சேர்ந்து வந்தவள், ஆச்சாரியர் நிழலடைந்திருக்கின்றுள். [எல்லோரும் வந்து பார்க்கின்றனர்]

1. பக். வ-ம்:—ஆ! ஹா!என்ன ஆச்சர்யமிது இவ்வம்மணியின் பாக்கியமே பாக்கியம் யாருக்குக் கிடைக்கும் இது சிலாக்யம்.

2. பக். வ-ம்:—நம்முடன் நின்று பதிகம்பாடி பஜித்துக்கொண்டிருந்த இப்பாவை இறக்கவேண்டிய காரணமென்ன?

3. பக். வ-ம்:—எல்லாம் பண்டரிநாதன் கிருபைதான், அவனது பரம பதநிழல் கிடைத்தது. நல்ல சிலாக்யவதி.

[திகம்பரராவ் என்பவர் வந்து பார்த்து]

திக. வ-ம்:—பாகவத சுவாமிகளே, எவர்க்குமெட்டாத பேரின்பங் கிட்டு மென்றுல் யாருக்குக் கிடைக்கும். ஒருபோதும் கிடைக்காது. இவ்வனிதாமணி தேவர்க்கெல்லா மெட்டாத பதவி பெற்றதானது தெய்வப்பிறப்பே யாகும்.

இவ்வுத்தமி, சுஞ்சுருணிபுரம் கங்காதரர் கமலாதேவியின் புத்திரி. காவீரபுரம் நமது நண்பர் மூர்த்திராவ் சரோஜினிபாயின் மருமகள். மித்ருராவின் மனைவி. சக்குபாயென்னும் சற்குணவதி சர்வலோக சரண்யனது சாயுச்யம் பெற்றுள்.

பாக. வ-ம்:—நல்லது சுவாமிகளே! தாங்கள் உடனே காவீரபுரம் சென்று இதுவிஷயத்தைத் தெரிவியுங்கள்.

[திகம்பரர் போகிருர்]

பாக. வ-ம்:—பக்தர்களே! அவ்வம்மையை சந்நிதிக்கு வெளியே கொண்டுவாருங்கள்.

[பக்தர்கள் சக்குவை வெளியிற் கொண்டுசெல்லும் சமயம் சக்குபாயின்பாதத்தில் இரத்தம் வடிவதைக்கண்ட சுந்தரி தனியாக வந்து]

சுந். வ-ம்:—(யோசித்து) நல்லது ஆண்டவனுடைய அருச்சனைக்கு புஷ்பம்பரிக்கச் சென்றசமயம் அவ்விடத்தில் விஷந்தீண்டியிருக்கவேண்டும். நமது கருடனைக்கொண்டே இவளை எழுப்பலாம்.

[ஒருபுறம் நின்று கருடனை நினைக்க கருடன் பிராப்தமாகி]

கரு. வ-ம்:—அன்னையே அழைத்த காரணமென்ன.

சுந். வ-ம்:—கருடா! நமதுபக்தை சக்குபாயானவள் விஷநாகந்தீண்டி இறந்து விட்டாள். நீ இதுசமயம் ஓர் ஜோகிவேடத்துடன் சஞ்சீவி கொணர்ந்தவளை எழுப்பிப் போகவேண்டும்.

[கருடன் உட்சென்று சர்ப்பங்களைத் தோளில் போட்டுக்கொண்டு ஜோகி யாக வருதல்]

## ஜோகி பாட்டு

தெளிந்து தெளிந்து தெளிந் தாடுபாம்பே-சிவன்
சீர்பாதங் கண்டுதெளிந் தாடுபாம்பே (தெ)

ஊத்தக்குழியிலே மண்ணெடுத்து
உதிரம் எலும்பாலே வீடுசேர்த்து
வாய்த்தகுயவனுர் செய்தபாண்டம்
வரப்போட்டுக்குமாகாதென் றூடுபாம்பே (தெ)

சுந். வ-ம்:—அடே ஜோகி! எனதுநேசி பாம்புகடித் திறந்துவிட்டதாகத் தெரிகிறது அவளை எழுப்பமுடியுமா.

ஜோகி. வ-ம்:—அம்மா எந்தப் பாம்பானாலும் சரி ஆட்டிவைப்பேன் எப்போப்பட்டவிஷமானாலும் தீர்த்துவைப்பேன் எனக்கென்ன தருவீர்கள்.

சுந். வ-ம்:—அப்பெண் ணெழுந்திருப்பாளாகில் உனக்கிந்த முத்து மாலையை இனும் தருகிறேன்.

[மாலையைக் கழட்டிக் கொடுக்க ஜோகி வாங்கிக்கொண்டு]

ஜோகி. வ-ம்:—அம்மா மந்திரம் போடணும் இங்கே கூட்டம் உதவாது கொஞ்சநேரம் எல்லோரும் கோயிலுக்குள் போயிருங்கள்.

[சகலரும் மறைகின்றனர் ஜோகி சக்குபாயை எழுப்பிவிட்டு மறைகின்றான்]

சக். வ-ம்:—ஆ! என்ன ஒருவரையும் காணோம் எங்கே நமது சுந்தரி (சுந்தரி சுந்தரி) என்று கூப்பிடுதல். [சுந்தரி வெளிவந்து]

சுந். வ-ம்:—என்ன! என்ன! சக்கு ஏனிப்படிக் கூவியழைத்தாய்.

சக். வ-ம்:—ஒன்றுமில்லை பகவானைப் பணிந்துகொண்டிருந்த நான் இங்குவந்த காரணமென்ன.

[பாகவதரும் பக்தகோஷ்டிகளும் வெளி வருகின்றனர்]

பாக. வ-ம்:—அம்மணி! நீதானே அன்று வந்தென்னிடம் உபதேசம் பெற்றுக் கொண்டவள். தேவி பண்டரிநாதனைப் பூசித்தவண்ணம் பரமபதம் பெற்றதைக்கண்டு வெகு வருத்தமடைந்தேன். இருக்கினும் உன்னுடன் துணையாய்வந்த அவ்வுத்தமி தன் கழுத்திலுற்ற முத்துமாலையை ஓர்ஜோகிக்குக் கொடுத்து உன்னை எழுப்பிவைத்தாள்.

சக். வ-ம்:—சுவாமி! பீமநதியில் ஸ்நானம் செய்து சுவாமிக்குப் புஷ்பம்பரிக்குஞ் சமயம் அத்தோட்டத்துள்ள கருநாகமொன்று என்னைக்கடித்துச் சென்றது நினைவிருக்கிறது. பின் நான் எவ்விதத்தும் பகவானைப் பார்த்தபிறகே உயிர்விட வேண்டுமென்று ஓடோடியும் வந்து, சுவாமியை சேவித்து விஷமயக்கத்தால் விழுந்து விட்டேன். இப்போதெழுந்து நின்றேன்.

பாக. வ-ம்:—அம்மணி! உன்னிஷ்டப்படி பண்டரிநாதனைச் சேவித்துக்கொண்டா யல்லவா? இனி யுன் துணைவியொடு காவீரபுரம் போவதே நன்மை. குருவாகிய என் வார்த்தையைத் தட்டாமற் சென்றுவா.

[பாகவதர் காலில் விழுந்துபணிந்தெழுந்து]

சக். வ-ம்:—சுவாமி! போய் வருகிறேன்.

பாக. வ-ம்:—தீர்க்க சுமங்கலீபவ. சென்று வருவாயம்மா.

[சக்குவும் சுந்தரியும் போகின்றனர். பாகவதர், கோஷ்டிகளுடன் சந்நிதிக்குள் போகின்றார்]

சுந். வ-ம்:—அம்மா! சக்கு உன்னுடன் நான் வந்ததும்போதும், பட்டபாடும் போதும். சீக்கிரம்வா. உன்னைக் கொண்டு வீட்டில் விட்டுவிடுகிறேன்.

சக். வ-ம்:—நேசி! என்மேல் வருத்தம் வேண்டாம் பாம்புகடித்ததென்று உன்னிடம் நான் சொல்லியிருந்தால் பகவானது தெரிசனம் எனக்குக் கிடைக்காது. நானும் உயிர்பெற்றிருக்க மாட்டேன். உண்மையை உன்னிடம் சொல்லாததினால் பரந்தாமனைச் சேவித்தேன். அவனது கருணையால் உனது சகாயத்தால் உயிர் பெற்றேன்.

சுந். வ-ம்:—நல்லது! சீக்கிரம் நடந்துவா வீடுபோய்ச் சேர்ந்து துவாதசி விரதத்தைப் பூர்த்திசெய்வோம். [போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—23. இடம்—மித்ருராவ் வீடு.

நடிகர்—மித்ருராவ், (மாயவேடம் தரித்த) சக்குபாய்.

[மித்ருராவ் நாற்காலி யிலமர்ந்திருக்க மாயசக்குபாய் பண்டுபலகாரங்கள் கொண்டுவருகிறாள்]

மித். வ-ம்:—காதலி! இவ்வளவு சிரமத்துடன் இப்பக்ஷணங்களை ஏன் இங்கே எடுத்து வந்தாய். நான் அங்கு வந்து புசிக்கமாட்டேனா.

சக். வ-ம்:—நாதா! எங்கு புசித்தாலென்ன? என் கடமையை நான் செய்ய வேண்டியவள் தானே.

[பலங்காரங்களைப் புசித்துத் தாம்பூலம்தரித்துக் கொள்கிறான்]

மித். வ-ம்:—கண்மணி! என்னருகில் சற்றமர்ந்து இனியதொரு கீதம் பாடுவாய்.

சக். வ-ம்:—பிராணேசா! சங்கீதம் பாடுந்திறமை எனக்குத் தெரியாதே. தங்கள் வார்த்தையைத் தடுத்தேனென்ற கோபம் வேண்டாம்.

மித். வ-ம்:—இன்று துவாதசியல்லவா. இன்றுதான் நமது பகவானை நாம் அந்தக்கரண சுத்தியுடன் ஆராதித்தல் வேண்டும். ஆகவே ஹரிவாசு தேவன்மீது ஒரு கீர்த்தனந் தெரிந்தவரை பாடு கேட்கலாம்.

### சக்குபாய் விருத்தம்

பாதியா யழுகியகால் கைய ரேனும்
  பழுதொழிலும் இழிகுணமும் படைத்தோ ரேனும்
ஆதியா யரவணையா யென்பா ராகி
  லவரன்றோ நாம்வணங்கு மடிக ளாவர்
சாதியா லொழுக்கத்தால் தக்கோ ராயின்
  சதுர்மறையாற் கேள்வியால் மிக்கோ ராயின்
போதிநான் முகன்பணியப் பள்ளி கொள்வார்
  பொன்னரங்கம் பொற்றுதார் புலையர் தாமே.

### பாட்டு

(சந்யாசம் சன்மார்க்கம் என்ற மெட்டு)

பல்லவி

ஜகந்நாதா சங்கீதா
சமயமிதுவேவரந் தந்திடவாதா (ஜக)

அநுபல்லவி

சுகமிலகியமகா தூயவிநோதா
துஷ்டநிக்கிரகசம் மாரப்பிரக்யாதா (ஜக)

சரணம்

அரிமோஹநாரா யணவாசுதேவா
ஆதிமூலனேவுன தடிமையைக்காவா
பெரியபரம்பொரு ளானசுஜீவா
பெருமாளெனும் பேர்கொண்ட ப்ரபுவேநீவாவா (ஜக)

மித். வ-ம்:—காதலி! உனது இனிமைவாய்ந்த கீதத்தைக்கேட்க என் மனம் வெகு திருப்தியடைந்தது. கண்ணே பத்திமார்க்கப் பஜனை பாடியதுபோல், காதற்கினிய பதமொன்று பாடுவாய் கேட்கலாம்.

சக். வ-ம்:—நாதா! தங்களுத்திரவின்படி பாடத்தடையில்லை. எனினும் இன்றைய துவாதசி பூசைக்கு நான் நதிக்குச்சென்று ஸ்நானஞ் செய்துவந்து இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களைக் கவனிக்கவேண்டும். தங்களுடனிருந்து சங்கீதம் பாடிக் கொண்டிருந்தால் மாமாவும் மாமியும் விரத நேரத்தைத் தவற விட்டாயே என்று என்னைக் கோபிப்பார்கள். வீட்டு வேலையைக் கவனித்துப் பின் நமது ஏகாந்த சமயம் தங்கள் மனதிற்கினிமையான பாடல்களைப் பாடுகிறேன். உத்திரவு கொடுங்கள்.

மித். வ-ம்:—நீ சொல்வதுஞ் சரிதான் சீக்கிரஞ்சென்று துவாதசி விரதத்துக்காக வேண்டியதைக் கவனி. (போகின்றனர்)

[மாயசக்குபாய் வேஷமிட்ட கிருஷ்ணன் மறைகின்றார்]

(சீன் முடிவு)

---

சீன்—21. இடம்—மூர்த்திராவ் வீடு.

நடிகர்—மூர்த்திராவ், திகம்பரராவ், சரோஜினிபாய், யமுனாபாய்.

[மூர்த்திராவ் நாற்காலியிலமர்ந்திருக்க சரோஜினி வெற்றிலை மடித்துக் கொடுக்கிறாள்]

மூர். வ.ம்:—சரோஜினி, பார்த்தனையா, சக்குபாயின் கைச்சமையல் எவ்வளவு நேர்த்தியாகயிருக்கிறது. காலையில் அவள் செய்த பக்ஷணங்களும் பலே பசுந்தாக இருந்தது. இன்றுதான் வயிறாரப் புசித்தேன்.

சரோ. வ-ம்:—ஐயோ! பாவம் சக்குபாயைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடுமே. உம்மையார் வேண்டாமென்றது.

மூர். வ-ம்:—அடி! கிழட்டுப்பிணமே. உண்மையைச் சொன்னாலுனக்கேன் இப்படிக்கோபம் வருகிறதே.

[யமுனாபாய் உள்ளிருந்து ஓடிவந்து மூர்த்திராவைப் பார்த்து]

யமு. வ-ம்:—அப்பா, அப்பா! தங்களைக் காணத் திகம்பராராவ் வந்திருக்கின்றார்.

மூர். வ-ம்:—யார்! பண்டரிபுரத் திகம்பரரா?

சரோ. வ-ம்:—வேறெந்தத்திகம்பரர் வருவார் அவர்தானுமது சிநேகிதர் வந்திருக்காப் போலிருக்கிறது

மூர். வ-ம்:—யமுனா! சீக்கிரம் சென்றவரை இங்கழைத்து வாம்மா.

[யமுனா உள்ளே போய் திகம்பரரை அழைத்துவர]

மூர். வ-ம்:—வரவேண்டும்! வரவேண்டும்! ஏது இவ்வளவு தூரம் வந்தது. இவ்வாசனத்தில் வீற்றிரும்.

[திகம்பரர் நாற்காலியி லமர்ந்து]

திகம். வ-ம்:—மூர்த்தியாரே! சவுக்கியந்தானா?

மூர். வ-ம்:—சுகந்தான்! எங்கேவந்தீர் என்னவிசேடம்.

திக. வ-ம்:—ஒருசங்கதி சொல்லவந்தேன். என்னசங்கதி யென்றால் உங்கள் வீட்டு விஷயமான சங்கதிதான்.

மூர். வ-ம்:—ஓய்! திகம்பரரே! சொல்லவேண்டியதைச் சொல்லி முடிக்காமல் சங்கதி சங்கதி என்று ஏன் வளர்த்துகிறீர்.

திக. வ-ம்:—முக்யமான சங்கதிதான் அதாவது உங்கள் மருமகள் இறந்துவிட்டாள் இதைத்தான் சொல்லவந்தேன்.

மூர். வ-ம்:—சட்! என்னவார்த்தை சொன்னீர். கோபம் வந்ததோ தவிடு பொடியாக்கி விடுவேன் போங்காணும் போம்.

திக. வ-ம்:—என்னையா! இவ்வளவு கோபப்படுகிறீர் நானும் இன்னும் மற்றவர்களும் பண்டரிபுரத்தில் பகவான் சன்னதியிலே உயிர்துறந்த "சக்குபாயை" எடுத்து வெளியில் கிடத்தி வந்த செய்தியைச் சொன்னால் பிரமாதப்படுத்துகிறீர்.

மூர். வ-ம்:—ஓய் திகம்பரரே! உமக்கு புத்தியில்லைபோலும் நான் கொஞ்ச நேரத்திற்குமுன் "சக்குபாய்" பலகாரங்கொடுக்க சாப்பிட்டு வந்தேன் இன்னம் கைவாசம் போகவில்லை வீண் பழிக்காளாக வந்து பேசுகிறீர் மரியாதையாய்ப் போம்,

திக. வ-ம்:—ஓய் வீணேதுள்ளாதீர்! நான் நேரில் கண்டு வந்து சங்கதிகள் சொல்ல விதண்டாவாதமாக பேசுறீர் அந்த சக்கு இறந்தேபோனுள் இங்கு யில்லவே இல்லை.

மூர். வ-ம்:—இவன் பைத்தியம் பிடித்தவன்போல் இருக்கின்றது இவனை என்ன செய்கிறேன் பார். [உள்ளே போகிறார்கள்]

(சீன் முடிவு)

---

**சீன்—25. இடம்—மித்ருராவ் வீடு.**

**நடிகர்:—மித்ருராவ் மூர்த்திராவ் சரோஜினி யமுனை (உண்மை) சுந்தரி சக்குபாய்.**

[மித்ருராவ் சயனத்தில் படுத்திருக்கிறார் மூர்த்திராவ் சரோஜினி யமுனை மூவரும் வருதல்]

மூர். வ-ம்:—அடே மித்ரு எங்கே வுன்மனைவி சக்குபாய், எங்கனுப்பினுயவளை.

[மித்ருராவ் திடுக்கிட்டெழுந்து தாய்தந்தையைப் பணிந்து]

மித். வ-ம்:—இப்போதுதான் எனக் கன்னம் படைத்தாள். சாப்பிட்டுவந்தேன் பாத்திரங்களை அலம்பிவைத்து விட்டு வருகிறேனென்றாள்.

சரோ. வ-ம்:—அடே மடையா! அவள் ஓடுகாலிஎன்று அப்போதே சொன்னேனே கேட்டனையா, பெட்டியிலிருந்த நகைகளை எல்லாம் அவளுக்கெடுத்துக் கொடுத்தாயே பயலே உன்னை மயக்கி நகைகளை வாங்கிக்கொண்டு ஓடிவிட்டாளடா.

யமு. வ-ம்:—சமையலறை கிணற்றங்கரை அந்தப்புறம் எந்தவிடத்திலுங் காணோம்.

மூர். வ-ம்:—காணவிட்டாலும் பெரிதல்ல பண்டரிபுரத்தில் அவள் இறந்து கிடப்பதாக எனது சிநேகிதர் திகம்பரர்வந்து சொல்லிப்போனது உண்மையா யிருக்குமா? ஏண்டா மித்ரு எங்களிடம் உண்மையைக் கூறடா.

மித். வ-ம்:—தாயே தந்தையே தாங்களிவ்விதம் புகல்வது தகாது. நாளுெருபாவமு மறியேன். இப்போதுதா னவளன்னமிடப் புசித்துவந்து படுத்தேன்.

சரோ. வ-ம்:—நானப்போதே தெரிவித்தேனல்லவா. அவள் பேய் பிடித்த சிறுக்கிஎன்று என்வார்த்தை சரியாய்விட்டதா அடே மித்ரு இப்போதாவது உனக்குப் புத்திவந்ததா.

மித். வ-ம்:—அம்மணி! இனியவள் விஷயத்தைப்பற்றி என்னிடம் பேசவேண்டாம். தங்களுக்கும் இனிமே லவளைக்குறித்த கவலைவேண்டாம் அவள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும். அந்தத் திருட்டுச்சிறுக்கி இந்தவீட்டி லிருக்கவுந்தகாது.

மூர். வ-ம்:—ஏண்டிஅடி சரோஜினி சக்கு இறந்துவிட்டாளென்று திகம்பரன் சொன்னது உண்மையா யிருக்குமா?

சரோ. வ-ம்:—அந்தமுண்டை இறப்பதாவது. பயித்தியம் பிடித்தலே கிறுள். ஒருவேளை இருக்குங்குணம் மறுவேளை கிடையாது. கழுதை யிறந்தால் நம்குடும்பம் நலம்பெற்றது.

[சரோஜினி உள்ளேபோகிறுள். மூர்த்திராவ் வாடியமுகத்துடன் வெளியேபோகிறுர் யமுனுபாய் தாயைப் பின்பற்றி போகிறுள்]

மித். வ-ம்:—(யோசித்து) இப்போது அன்னம்பரிமாறி இருந்தவள் இதற்குள் எப்படிப் பண்டரிபுரம் போயிருப்பாள். தேகசுகத்துடன்இருந்தவள் அங்கெப்படி இறந்திருக்கக்கூடும். இதென்ன பெரிய விநோதமா யிருக்கிறது.

[உண்மை சக்குபாய் சிரித்துக் கொண்டே வந்து]

சக். வ-ம்:—நாதா! நமஸ்காரம் (பணிகிறுள்)

மித். வ-ம்:—(திடுக்கிட் டெழுந்து) நீயார் இங்குயேன் வந்தாய். கிட்டவராதே எட்டிநில்.

சக். வ-ம்:—நாதா நான் தங்கள்மனைவி சக்குபாயல்லவா. அன்று தூணில் பிணைக்கப்பட்டிருந்த என் கட்டுகளை அவிழ்த்துப் பண்டரிபுரம் போய்வர அடுத்தவீட்டுச் சுந்தரியுடன் போக உத்திரவளித்தது தாமல்லவா. இதற்குள் மறந்து பேசுவது என் வினைப்பயன்தான்.

## தர்க்கம்

(போபோ என்முன் நில்லாதடி என்ற மெட்டு)

மித். சீ சீ என்முன் நில்லாதடி ஜெகஜாலக்காரியே

சக். செய்வதேன் கோபமே

மித். சீர்கெட வைத்தாயே

சக். வைத்ததொன்று மில்லை தங்கள் உத்திரவு மீறிடேன்

மித். இத்தனைப்பா சாங்குகற்று என்முனே பேசாதடி

சக். பேசுவதென்ன நாதா நீர்விடை தந்ததனுல் ஈசனைக்காணநா னேகிவந்தேன்

மித். சீ சீ என்முன் நில்லாதடி ஜெகஜாலக்காரியே.

மித். வ-ம்:—நிதானித்துப்பேசு. நானுவுனக்கு வுத்திரவு கொடுத்தேன். எங்குகற்றாய் இந்த ஜாலம். இங்கென்னிடம் செல்லாது வெளியிற் செல்வாய். தவறினால் தண்டனை எற்படும் ஜாக்ரதை.

சக். வ-ம்:—பிராணேசா! நான் பொய்பேசுபவளல்லவே. தங்கள் உத்திரவுமீறி நான் போகமாட்டேனே. நிதானித்துப் பாருங்கள்.

மித். வ-ம்:—என்னையா நிதானிக்கச்சொல்கிறாய். சீ! சீ! ஜெகஜாலி தூரப்போ. உன் தோஷம் என்னையும் சேரும்.

சக். வ-ம்:—இதுவும் என் பாவம், தெய்வமே இன்னமுமா என்னை சோதிக்க வேண்டும். என் பிராணேசரும் என்னை வெறுத்துப் பேசுகின்றனரே. இனியும் நானிவ்வுலகில் உயிருடன் வாழ வேண்டுமா. (அழுகின்றாள்)

## மித்ருராவ் பாட்டு

(அபனூருகுலனைதினே என்ற மெட்டு)

பல்லவி

அழுவதேன கன்றிடடி-வெகு
அக்ரமக்காரிநீயடி-கபடி (அழு)

அநுபல்லவி

பழுதில்லா-பர-மாத்மனைப்போற்றி (அழு)

சரணம்

ஜாரஜோர ஜாலிநீ-எந்தன்
தாய்சொல்லு மெய்தானினி
ஆருந்தனை இங்கழைத்தார்-வெகு
ஆத்திரங் கொண்டினித்தான். (அழு)

வ-ம்:—ஏனடி! வீணாக அழுது புலம்புகிறாய். இதென்னஜாலம் வெகு நன்றாயிருக்கின்ற துன்மாயம். துற்கபடி இதுவரை வுன்னைமாசற்ற மனத்தினளென்றும், ஸ்ரீ பண்டரிநாதன் பக்தை என்றும் பரிபூரணமாக நினைத்திருந்தேன், இன்றறிந்தேன் உனது கபட வஞ்சகத்தை என் தாய் உன் விஷயத்தில் சொன்னதெல்லாஞ் சரியே.

[கோபத்துடன்பிரம்பாலடிக்கிறான். சக்குபாய் ஓவென்றலற சரோஜினி, மூர்த்திராவ், யமுனாபாய் எல்லோரும் ஓடிவந்து நிற்கின்றனர்]

மித். வ-ம்:—தங்கா! யமுனா அடுத்த வீட்டு சுந்தரியை நானழைப்பதாக சற்றிங் கழைத்துவா. [யமுனா போகிறாள்]

மூர். வ-ம்:—அடே! மித்ரு இதென்னடா பெரிய இழவாய் விட்டது. ஏனடா அவளை இப்படி இம்சிக்கிறீர்கள். இதைவிட அவளது தாய் தந்தை வீட்டிற் கனுப்பிவிடுவது நன்மையல்லவா.

சரோ. வ-ம்:—(மூர்த்திராவை முறைத்துப்பார்த்து) வேதாந்தம் படிக்க வந்தாரப்பாயிவர். உம், இவர் வார்த்தையைக்கேட்ட தன்படி நடந்தால் நமது குடும்பம் நன்றாய் விருத்தியாகும். பித்தம் பிடித்த சிறுக்கியை வெட்டிப்போடடா.

மூர். வ-ம்:—அடியே! பஜாரிப்பலுக்கி, ஏனடி துள்ளிவிழுகிறாய். ஆவதெல்லாம் ஆச்சு போவதெல்லாம் போச்சு. கிழட்டு நாரி உன்னாலேயே என்குடும்பம் கெட்ட பெயர்க்குற்றது. பட்டிச் சிறுக்கி முதலாவதுன்னை வெட்டி எரிகிறேன் பின் வருவது வரட்டும்.

[சரோஜினி ஒரு புறம் ஒதுங்கி நிற்கிறாள். யமுனாபாய் சுந்தரியைக் கூட்டிவருகிறாள்]

மித். வ-ம்:—அம்மா, சுந்தரி இவள் உன்னுடன் பண்டரிபுரம் வந்தது மெய்தானா இவளை அழைத்துப் போகும்படி நானுனக்குச் சொன்னது உண்மைதானா.

சுந். வ-ம்:—இதென்னயிது தாங்கள் கேழ்ப்பது புதுமையாயிருக்கிறதே நானாவது பண்டரிக்குப்போவதாவது நேற்று ஏகாதசியிரவு நானும் என் கணவரும் காலக்ஷேபத்திற்குப் போயிருந்தோமே.

[சுந்தரி போகிறாள் சக்குபாய் மனம் வருந்தி நின்று]

## சக்குபாய் பாட்டு

### (வானவர் போற்றும் என்ற மெட்டு)

கண்ணிகள்

| | | |
|---|---|---|
| பண்டரிபுரத்துக் | கதிகாரா | |
| பாவை என்பக்திக் | காதாரா | |
| விண்டுவே சூர | சம்மாரா | |
| விளங்கும் வேத | சிங்காரா | (பண்) |
| கேசவா மாதவா | முகுந்தா | |
| என்முறை கேட்கும் | வைகுந்தா | |
| வாசவா வந்தருள் | தாதா | |
| விநோதா வரத | ப்ரக்யாதா | (பண்) |

வ-ம்:—ஹே! நாராயணா! ப்ரம்மபாராயணா! கோவிந்தா, கோகுலங் காத்தமாவிந்தா! கோபாலா, பூபாலா, பக்தவத்ஸலா, பரம

தயாளா, பரந்தாமா, பராக்ரமராமா, ஆபத்பாந்தவா, ஆதி மூலஜோதியானவா, அரிஹரி, முரஹரி, நரகரி, அம்புஜாக்ஷரி, சேஷசயனு, செங்கமலநயனு, மச்சகூர்மவராக நரசிம்மா, வாமன, ராம, பரசுராம, கிருஷ்ணுவதார, கேசவா, மாதவா, யாதவா, பக்தர்களைக் காத்துரட்சிக்கும் பரந்தாமா, தாமோதரா, துளசீதரா, பீதாம்பரா, துஷ்டசம்மாரா, விட்டலநாதா, அஷ்டாக்ஷரவேதா, பாண்டுரெங்கா, நின்னரும் திருவடிக் கடிமை என்னை என் சுற்றத்தார் சகலரும் புறம்பேசி வெறுக்கின்றனர். இது சமயம் தேவரீரது திருவடித் துணையன்றி மறு துணை காணேன் ப்ரபுவே பாதுகாக்க வேண்டும்.

[மௌனமாக நிற்கிருள் பகவான் பிரத்தியட்ச மாகின்றனர். எல்லோரும் ஸ்துதித்து நிற்கின்றனர்]

பக. வ-ம்:—ஹேமித்ரு! நீங்கள் வீணுகயேன் "சக்குபாயை வருத்துகின்றீர்கள் நானே சோதனைக்குள்ளாக்கினேன் பக்தியிற் சிறந்த அம்மாதின் குணுதிசயங்களைப்போல் இப்பூதலத்தில் எவர்க்கும் கிடையா! மேலும்; அம்மாதற்கரசியை" சரோஜினி படுத்திய கொடுமையின் கேட்டை ஒவ்வொரு நிமிடமும் இடைவிடாது யான் கண்காணித்தேன் சக்குவை கட்டிவைத்த சரோஜினிக்கு நற்புத்தி புகட்டவேண்டியே நான் உன்னைப்போல் வந்து கட்டை யவிழ்த்து பண்டரிபுரம்போக அனுமதித்ததும் பின்னுல் நாஞெரு சக்குவாகவந்து குடும்பங்களை நடத்திவந்தேன். பண்டரிபுரத்தில் சக்குவை என்னுடன் என் ஐக்யப்படுத்தியும் நான் துணைஅனுப்பிய ருக்மணியினது முயற்சியினுல் உயிர்பெற்றெழுந்த சக்குபாய் தனதுபதியின் கட்டளை மாருது இவ்விடம் வருவதையறிந்த நான் இங்கிருப்பது கூடாது என்றெண்ணியவுடன் மறைந்தேன் நீங்கள் யாவரும் உண்மை சக்குபாயை வெறுத்தீர்கள். இனி, அங்கீகாரஞ் செய்து கொள்ளுங்கள் இன்னஞ் சிலகாலம் சக்குபாயின் புகழ் பூலோகத்தில் விளங்கியபின் எனது பரமபதஞ் சேர்த்துக் கொள்ளுகின்றேன் இன்றுமுதல் "சாந்தகுண சக்குபாய்" என்னும் பெயருடன் இருந்துவாழ்க. நான் செல்கின்றேன்.

சக். வ-ம்:—சுவாமின்! பாதாரவிந்தம் பணிந்தேன் இன்னமும் இப்பூதலவாழ்வு வேண்டாம் பட்டபாடுபோதும் ஞானனந்த மூர்த்தியே காப்பாற்றவேண்டும்.

பக. வ-ம்:—நீ சற்குணவதியாயிருந்து வருவாய் சர்வ மங்களமுண்டாகும். மனத்துயரைமாற்றி சுகஜீவியாய் வந்து சேர்.

சக். வ-ம்:—சந்தோஷ மைய்யனே!

[பகவான் மறைதல் சக்குபாய் மாமன், மாமி, புருடன், நாத்தி முதலியவர் களை மும்முறை வலம்வந்து நிற்றல்]

மூர். வ-ம்:—மருமகளே! நீ சுகமாயிருந்து வாழ்வாயம்மா.

சரோ. வ-ம்:—(சக்குவை கட்டிப்பிடித் தணைத்து) என் செல்வமே! நான் அரியாதுசெய்த குற்றங்களை மனதில்வையாதே நீதா னம்மா "பாக்யவதியிலும் மேலான சிலாக்யவதி" உன்னருங் குணபூஷணமொன்றே எனக்கு மேலானபதவி யளித்தது.

யமு வ-ம்:—மதனி! நான் சிறியவள் அறிந்தும் அறியாமலும் செய் ததை மனதில் நினைக்கலாகாது.

மித். வ-ம்:—என்னருமைக் காதலி! நானுனை உதாசினஞ் செய்ததை எண்ணி வருந்தாதே பிறர்பழியில்லா திருக்கவே உன்னை வெறுத்தேன் உனது மாசற்ற திருமுகமதை நேரிற்காண லச்சையாகிறது என் மதுரக்கனிரஸமே உன்னால் சாமான்யத் தில் கிட்டாத பரமாத்மாதரிசனங் கிடைத்தது பூஜாபலமே!

சக். வ-ம்:—நாதா! இது சகஜமே இதைப்பற்றி வருந்துவோர் பதருக் குச் சமமேயாவர் நான் யாவர்களுக்கும் சிஷ்ருஷைசெய்து இன் னமும் தங்களுடைய பூர்ணகடாக்ஷ பேரன்பையடைய காத் திருக்கின்றேன்.

(சீன் முடிவு)

---

## எல்லோரும் சேர்ந்து பாடுதல்

ஆனந்தச் சோபனமே தானன்புக் கேமனமே
ஆலிங்கன ஸ்தாபனமே மேலுங்கண் டோமுனமே

ஆரம்பம் பாரெங்கும் ஆணும் பெண்ணுந்தான்
சேரும்பண் பேகொண்டுர் தோணுங் கண்ணுந்தான் (ஆ)

அதிமதுரித ரகசியமுண் டாருக் குத்தான்
பொதுவிதியிது மதிபேசும் பேருக் குத்தான்

ஆ முத்தி நூலுக்கி தே செப்புமே
மா முத்து சாமிக்கு ளே ஒப்புமே (ஆ)

## நாடகம் முற்றுப்பெற்றது

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

22430

திருமகள் விலாசம் பிரஸ், சென்னை:—1933

சங்கீத சாஹித்திய சந்தவண்ணச் சரபம்

## ச. சு. சங்கரலிங்கக் கவிராய ரியற்றிய

புதிய டிராமா சரித்திரங்கள்:

| | | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| கோவலன் சரித்திரம் | [நாடக ரஞ்சிதம் மலர் | | 1] | 0 | 6 | 0 |
| நல்லதங்காள் சரித்திரம் | ,, | ,, | 2 | 0 | 6 | 0 |
| லலிதாங்கி சரித்திரம் | ,, | ,, | 3 | 0 | 6 | 0 |
| ஸ்ரீ பாமா விஜயம் | ,, | ,, | 4 | 0 | 6 | 0 |
| பாதுகா பட்டாபிஷேகம் | ,, | ,, | 5 | 0 | 6 | 0 |
| ஸ்ரீ ராமதாஸ் சரித்திரம் | ,, | ,, | 6 | 0 | 6 | 0 |
| தூக்கு தூக்கி சரித்திரம் | ,, | ,, | 7 | 0 | 6 | 0 |
| சத்தியவான்-சாவித்திரி | ,, | ,, | 8 | 0 | 6 | 0 |
| நந்தனர் சரித்திரம் | ,, | ,, | 9 | 0 | 6 | 0 |
| ஷை 9-சரித்திரங்கள் ஒரே கட்டடம் காலிகோ பைண்டு செய்தது "நவ நாடக ரஞ்சிதம்" | | | | 3 | 0 | 0 |
| சகுந்தலா | [நாடக ரத்னம் மலர் | | 1] | 0 | 6 | 0 |
| காலவரிஷி | ,, | ,, | 2 | 0 | 6 | 0 |
| சிறுத்தொண்டன் | ,, | ,, | 3 | 0 | 6 | 0 |
| மார்க்கண்டேயர் | ,, | ,, | 4 | 0 | 6 | 0 |
| குலேபகாவலி | ,, | ,, | 5 | 0 | 6 | 0 |
| பீஷ்மர் பிரதிக்ஞை | ,, | ,, | 6 | 0 | 6 | 0 |
| சக்குபாய் | ,, | ,, | 7 | 0 | 6 | 0 |
| காளிதாஸ் | ,, | ,, | 8 | 0 | 6 | 0 |
| துருவ சரித்திரம் | ,, | ,, | 9 | 0 | 6 | 0 |
| ஷை 9-சரித்திரங்கள் ஒரே கட்டடம் காலிகோ பைண்டு செய்தது "நவ நாடக ரத்னம்" | | | | 3 | 0 | 0 |

தியானமிர்த செந்தமிழ்த் திலதமென்னும்

## புதிய பக்திரசக் கீர்த்தனம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதற் பாகம் | ... | ... | 0 | 5 | 0 |
| இரண்டாம் பாகம் | ... | ... | 0 | 5 | 0 |

ஏகை

## சிவஷண்முகம்பிள்ளை அவர்களியற்றிய

டிராமா சரித்திரங்கள்:

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| சம்பூர்ண இராமாயணம் 12-பாகங்களடங்கியது | | 2 | 0 | 0 |
| லவகுச | ... ... ... ... | 0 | 4 | 0 |

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடராமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.